தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

* திங்களிதழ் *

துணர் : ௫சா

மலர் :

கரந்தைத் தமிழ்ச்சங்கம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு: உ௲கக௩.-துந்துபி ஆவணி
(1982 ஆகஸ்டு - செப்டம்பர்)

MALLIKA ARTS T.J.

பொழிற்றொண்டர்
வே. சுப்பிரமணியன்

MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY THANJAVUR THE TANJAVUR

தமிழ்ப் பொழில்

துணர்: ருசு] [மலர்: ரு

உள்ளுறை: பக்கம்

1. அறிவியல் ஒரு விளக்கம் .. 195
முனைவர் ப. க. பொன்னுசாமி,
எம். எஸ்சி., பிஎச். டி.,
பேராசிரியர், இயற்பியல் துறை
பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி.

2. பெரிய குளத்துக் கல்வெட்டில் 206
புலவர் து. இராசகோபால்,

3. எது எழுத்து .. 210
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

4. ஒப்புரவு .. 215
ந. இரா. முருகவேள்,
எம். ஏ., எம். ஒ. எல்.,

5, ஏடும் எழுத்தும் .. 223
புலவர் மு. சண்முகம் பிள்ளை
சுவடிப் புலம், தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

6. வெண்பாப் போட்டி ... 233

7. வினா விடை ... 238

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ருசு	திருவள்ளுவர் யாண்டு உ0கக துந்துபி—ஆவணி 1982 ஆகஸ்ட்டு—செப்டம்பர்	மலர் ரு

தமிழ் வாழ்க

அறிவியல் — ஒரு விளக்கம்

முனைவர் ப. க. பொன்னுசாமி, எம். எஸ்சி., பிஎச். டி.,

மனித வரலாறு இன்று பரந்து விரிந்து ஆழ்ந்து படர்ந்திருக்கின்றது. இந்த வியத்தகு வளர்ச்சியின் ஊடே இலைமறை காயாக, தாமரை இலை நீராக, பட்டும் படாமலும், உணரப்பட்டும் உணரப் படாமலும், விரும்பியும் வெறுக்கப்பட்டும் அறிவியல் வளர்ந்து வந்திருக்கின்றது எல்லாவிதமான முன்னேற்றங்களுக்கும் துணை நின்று வந்திருக்கின்றது. எத்தனையோ பிரிவுகளாகப் பிரிந்து, தனித்தும் இணைந்தும் தானும் முன்னேறிக்கொண்டு வந்திருக்கின்றது. ஒவ்வொரு நாளும் எத்தனையோ கருவிகள், கண்டு பிடிப்புக்கள், புதுமை விளக்கங்கள் தோன்றியவண்ணமே இருக்கின்றன. நூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஓர் ஆராய்ச்சியாளர் வேதியலில் அதுநாள்வரை ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகளையும், கோட்பாடுகளையும், கருதுகோள்களையும், கண்டுபிடிப்புக்களையும் தொகுத்து வெளியிட எண்ணி அவற்றையெல்லாம் எழுத ஆரம்பித்தாராம். ஓராண்டுக் காலத்திற்குமேல் எழுதிவிட்டு — எடுத்த முயற்சியை முடிக்க முடியாமல் — முடித்துவிடலாம் என்ற நம்பிக்கையை இழந்து — செய்தித்தாள்களில் ஓர் அறிக்கையை விடுத்தாராம் — ''வேதியியல் ஆராய்ச்சியாளர்களே, ஓராண்டுக் காலத்திற்கு உங்கள் ஆராய்ச்சிகளை யெல்லாம் நிறுத்துங்கள்'' என்று!

இன்று அறிவியல் எல்லாத்துறைகளிலும் இத்தகைய வியத்தகு நிலையில்தான் வளர்ந்துகொண்டிருக்கின்றது.

மனிதன் என்று தோன்றினுனே அன்றே அறிவியலும் தோன்றி விட்டது. தொடக்கக் காலத்திலே குகைவாழ் மக்கள் சக்கி முக்கி என்ற இரண்டு கற்களைத் தேய்த்தால் நெருப்பு உண்டாகும் என்பதைத் தேய்த்துத் தேய்த்துத்தான் அறிந்தார்கள். எந்த மிருகங்களை பழக்கி உதவிபெறலாம் என்பதையும் பூனைதொட்டு யானைவரை முயன்று பட்டறிந்தே கண்டார்கள். இன்று சீன மக்களின் உணவுத்தயாரிப்புக்கள்தாம் மிகவும் சுவையானவை என்று உலகம் ஒப்புக்கொள்கிறது. எப்படி அவர்களால் அதைப் பெறமுடிந்தது? சீனப்பேரரசர்கள் ஏராளமான அடிமைகளை வைத்து, அகப்பட்ட ஒவ்வொரு இலையையும், பழத்தையும் வேரையும், புழுவையும், பூச்சியையும், மிருகங்களையும் உண்ணச் செய்து, அந்தக் கொடுமையான அணுகுமுறையினல்தான், பரி சோதனைகளால்தான், நல்ல நல்ல உணவுகளைப் பிரித்தெடுத் தார்கள். முறை கொடுமைதான் — ஆனுல், இன்று அவர்க ளுடைய உணவுவகைகள் சிறந்து நிற்கின்றன!

புதுமைக் கண்டுபிடிப்புக்கள் தானுகவும் இயற்கையாகவும் வெளிவருகின்றன; தேவையினுலும் கொண்டுவரப்படுகின்றன. தாமசு ஆல்வா எடிசன் ஆயிரத்துநூறு கண்டுபிடிப்புக்களைத் தம் முடையதாகப் பதிவுசெய்துவிட்டு மறைந்தார். அவர் அவ்வப் போது கிழித்துக் குப்பைக்கூடைகளில் எறிந்த குறிப்புக் காகிதங் கள் பாதுகாக்கப்பட்டிருந்தால், இன்னும் ஓராயிரம் புதிய கண்டு பிடிப்புக்களாவது வந்திருக்குமாம்! அவர் தனக்குத்தானே, பிறர் தூண்டுதலின்றி, இயற்கையாகவே அறிவியலார்வம் பெற்றிருந் தார். ஆழச்சுரங்கங்களில் அணையாமல் எரியும் விளக்கொன்றைத் தயாரித்துத் தருமாறு அரசாங்கம் சர். அம்ரி டேவியைக் கேட்டுக் கொள்ள, ஐந்தே திங்கள்களில் அப்படியொரு விளக்கை டேவி கண்டுபிடித்துத் தந்தார். நாள் வைத்து அவர் எத்தனையோ புதிய வற்றைக் கண்டுபிடித்துத் தந்ததாக வரலாறு கூறுகின்றது!

அதிகாரபூர்வமான அறிவிப்புப்படி பேரரசன் நெப்போலீயன் செயிண்ட் எலினுத் தீவில் ஆயிரத்துத் தொண்ணூற்று இருபத் தொன்றும் ஆண்டு மே மாதம் ஐந்தாம் நாள் இறந்தார். அறிவிக் கப்பட்ட வியாதி — வயிற்றில் புற்றுநோய். ஆனுல், நெப்போலி யன் தனது உயிர் பிரிவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னுல் சொல்லி எழுதிய உயிலில் ''நான் ஆங்கிலேயர் நியமித்த கொலைகாரர்க ளால் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்று எழுதி வைத் துள்ளார். அச்செய்தி உண்மையா? அன்றைய அரசு ''இல்லை'' என்றது. எப்படிக் கண்டுபிடிப்பது? புதைக்கப்பட்ட உடலைத் தோண்டியெடுக்க அனுமதியில்லை. நூற்றுநாற்பது ஆண்டுகள்

கழித்து ஆயிரத்துத்தொண்ணூற்றுஅறுபத்தொன்றில் கிளாஸ்கோ நகரைச் சேர்ந்த இரண்டு டாக்டர்கள் உலகிலிருந்த எல்லா அரும் பொருட் காட்சியகங்களுக்கும் ஒரு வியப்பான வேண்டுகோளை விடுத்தனர். ''நெப்போலியனின் தலைமுடியில் ஒன்றிரண்டு கிடைக்குமா?'' என்பதே அந்த வேண்டுகோள்! ஒரு காட்சி யகத்தில் அவரது முடி இருந்தது. நெப்போலியன் இறப்பதற்குச் சிலமணி நேரங்களுக்கு முன்னல் முடிவெட்டிக் கொண்டபோது எடுத்து வைத்த முடிக்கொத்து அது. அந்த முடியைப் பெற்று, அந்த இரண்டு டாக்டர்கள், ''நெப்போலியன் நச்சினல் கொல்லப் பட்டிருக்கிருர்'' என்று அறிவித்தார்கள். திடீரென்று மரணம் வராதபடி, ஆனல் மரணம் குறிப்பிட்ட காலத்தில் வந்தே தீரும்படி, 'ஆர்சனிக்' என்ற நச்சுப்பொருளைக் கொஞ்சம் கொஞ்சமாக, மாதக் கணக்கில் உணவில் கலந்து கொடுத்திருந்ததை அந்த டாக்டர்கள் கண்டுபிடித்து உறுதி செய்தனர். ஆர்சனிக்கை உட் கொண்டால் சிறிதளவு அது முடிகளில் குடியேறும். நூற்றுக் கணக்கான ஆண்டுகளானுலும் தங்கி நிற்கும். மிகமிகச் சிறிய அளவில் அப்பொருள் இருந்தால் எந்த வேதியியல் முறையிலும் அதைக் கண்டுபிடிக்கமுடியாது. பொதுவாக ஆர்சனிக் கதிர்வீச்சுக் குணம் இல்லாதது. மிகப் பெரிய சோதனைக்குட்படுத்தப்பட்டு அதைக் கதிர்வீச்சுப் பொருளாக்க முடியும். அந்த டாக்டர்கள் இந்த முறையில்தான் நெப்போலியன் மரணத்தைக் கண்டுபிடித் தார்கள். அறிவியலின் வலிமையை, நுட்பத்தை இந்த நிகழ்ச்சி நமக்குப் புலப்படுத்துகிறது. ஆகவே, இந்தப் பரந்து விரிந்த இயற்கைத் தாயைப் பற்றிய உண்மைகளைப் பகுத்தறிவு கொண்டு வெளிக் கொணர்வதுதான் அறிவியல். அஃது ஒரு புதிருமல்ல, அச்சத்தின் உச்சமுமல்ல — தெளிந்த உண்மைகளின் தொகுப்புத் தான்!

அறிவியலை ஆளுகின்றவர்கள் எல்லோரையும் போன்றே எளிதான மக்கள்தாம். மற்றவர்களைப் போன்றேதான் வாழ்கிருர் கள். அவர்களால் எப்படி இந்த வியத்தகு செயல்களையெல்லாம் செய்ய முடிகிறது? பொதுவாக இன்று ஒரு நம்பிக்கை —''அறிவிய லாளர்கள் சிறப்புமிக்க ஒருவகை அணுகுமுறையைக் கையாள்கிருர் கள்; அதனுல்தான் அவர்களால் அப்படி வெற்றிகளைப் பெற முடி கிறது'' — என்று. அந்த அணுகுமுறையின் குணங்கள் யாவை?

நாம் அன்ருட வாழ்க்கையில் பலவற்றைக் காண்கிறோம், கேட் கிறோம், உணர்கிறோம். அவற்றில் சிலவற்றை நம்புகிறோம், சில வற்றை நம்ப மறுக்கிறோம். நம் நம்பிக்கைகளெல்லாம் பொது வாக ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் நம் மனநிலையின் போக்குக்கு

ஏற்ப அமைகின்றன. சூரியன் தினமும் கிழக்கில் உதித்து மேற்கில் சாய்வதைக் கண்டதால்தான், அது பூமியைச் சுற்றுகிறது என்று நமது முன்னோர்கள் நம்பத் துணிந்தார்கள். ஆனால், காலப்போக்கில்—ஏன் அடிக்கடியும், அவ்வப்போதும், பல நேரங்களில் மிகவும் காலங்கடந்த நிலையிலும் — நாம் கண்டவையெல்லாம் நம்பக் கூடியனவல்ல என்ற முடிவுக்கு வருகிறோம். அப்படி நமது மன நிலையின் போக்காலும், சுமந்து வந்துவிட்ட காரணத்தாலும், காலூன்றிவிட்ட நம்பிக்கைகளெல்லாம் வேறு பலவகைப்பட்ட அனுபவங்களை நாம் பெறும்போது, அவை பொய்ம்மைகளாகி விடுகின்றன. பொய்மைகளை இனம் காண்பதிலேதான் அறிவியலின் பெற்றியே இருக்கிறது.

பழக்கத்தாலோ பிடிவாதத்தாலோ ஒரு நம்பிக்கையை இதுகாறும் நம்பி வந்தோமே என்பதை முன் வைத்து, மேலும் அப்படியே தொடர்ந்து நம்ப முயல்கிறோம். இங்கே நமது மனக் கதவை இறுக மூடிவைத்துக்கொண்டு நம்முள்ளே ஊறிப் போய்விட்ட எந்த நம்பிக்கையையும் நாம் சந்தேகிக்க மறுக்கிறோம். எவரேனும் நமது மேம்பட்ட குணங்களை, நமக்கு மிகவும் வேண்டியவர்களை, நமது நாட்டை, இனத்தை, மதத்தை, மொழியைக் கேள்வியாக்கும்போது குறைகூறும்போது, நாம் உடனுக்குடன் நமது நம்பிக்கையை மேலும் வலியுறுத்தி, அப்படிக் கேள்விக் கேட்பதும், குறை கூறுவதும் அறிவீனம், துரோகம், ஒதுக்கப்பட வேண்டிய செயல் என்று நமக்கு நாமே முடிவெடுத்துக் கொள்கிறோம். நமக்கு ஒத்துவராத எண்ணங்களிலிருந்து இப்படிப் பல நேரங்களில் நம்மை நாமே ஒதுக்கி வைத்துக் கொள்கிறோம். இந்த முறையை 'ஒதுக்கும் அணுகுமுறை' எனலாம். இந்த முறையால் கால வெள்ளத்தில் நீந்த முடியாது. மாறுபட்ட எண்ணச் சுழலில் ஒருநாள் அஃது அடித்துப்போகப் பட்டுவிடும்.

சில நேரங்களில் கேள்விக் கணைகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. அப்போதெல்லாம் கடைப்பிடிக்கும் நம்பிக்கைகளை மேலிடத்திலிருந்து வந்த ஆணைகள் என்று சமாதானம் கொள்ள முயலுவோம். மதக்கோட்பாடுகள் — அவை புனிதமானவை, வழக்கத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டவை — என்ற விதத்தில் மாற்றம் பெறாத நம்பிக்கைகளாக அமைகின்றன. நமது அரசியல், பொருளாதார, சமூகம் பற்றிய நம்பிக்கைகளெல்லாம் இந்த முறையில்தான் பின்பற்றப்படுகின்றன. இங்கே, மக்கள் அச்சுறுத்தப்பட்டு சில நம்பிக்கைகளைப் பலப்படுத்தி, மாற்றங்களைத் தவிர்க்க முற்படுகிறார்கள். இந்த அணுகுமுறையை 'ஆணை அணுகுமுறை' எனலாம். இந்த அணுகுமுறை ஆணையிடுபவர்

மாறியதும், தானும் வரும் ஆளுக்குத் தகத் தன் நிறத்தை மாற்றிக் கொள்ளும்.

சில நம்பிக்கைகள், 'உண்மையைத்தவிர வேறு என்ன' என்ற மேம்போக்கு நிலையில் அமைந்துவிடக்கூடும். மாபெரும் வான வியல் அறிஞர்கள் பலரும் — கோபர்நிகசு உட்பட — 'கோள்களின் பாதை வட்டமாக இருக்காமல் வேறு எப்படியிருக்கமுடியும்' என்று தான் நம்பி வந்தார்கள். இரண்டு நேர்கோடுகள் ஒரு பரப்பை உட்கொள்ள முடியாது என்ற நம்பிக்கை பல நூற்றுண்டுக் காலங் கள் மறுக்கப்படாமலேயிருந்து ஆசு என்ற அறிவியலாளர் வந்து தான் மாற்றம் பெற்ற வரலாற்றை நாம் அறிவோம். இப்படி நம்பிக்கைகளைச் சுமக்க வைக்கும் முறையை உள்ளுணர்வு 'அணுகு முறை' எனலாம். உள்ளுணர்வுகள் பலவும் பொய்ம்மைகளாகப் போகலாம்.

மேற்கண்ட அணுகுமுறைகளெல்லாம் இரண்டு முக்கிய குணங் களைப் பெற்றவை:

1) மனிதனின் எதிர்ப்பார்ப்புகளுக்கும், அவனது உடனுக் குடன் சந்தர்ப்பத்திற்கேற்ப எதையும் மாற்றிக் கொள்ளும் பண்புக்கும் உட்பட்டவை.

2) தவறில் போய்ச்சிக்கி விடுவோமென்றே, தவருக உணர்ந் தாலும் அதைத் திருத்திக் கொள்ளலாமென்றே ஒப்புக் கொள்ளாதவை — அதாவது வளைந்து கொடுக்காதவை.

இம்முறைகளெல்லாவற்றிடமிருந்தும் அறிவியல் அணுகுமுறை என்பது பெரிதும் மாறுபட்ட ஒன்ருகும்.

அறிவியல் அணுகுமுறை — முடிந்தவரைக்கும் சந்தேகங்களை வளர்க்கவிட்டு, அவற்றை அலசவிட்டு, நம்பிக்கையைத் தூக்கி நிறுத்தும் சாட்சியங்களை எல்லாப் பரிசோதனைகளுக்கும் உட்படுத்தி —புதுப்புதுச் சந்தேகங்களை மீண்டும் மீண்டும் கிளப்பி, பதில் பெற்று. அன்றுவரை சேகரித்த அறிவுக்கு ஒப்புதலான ஒருங் கிணைந்த செயற்பாடாகும்; புதுப்புது எண்ணங்களையும் ஏற்றுக் கொண்டு வளைந்து கொடுக்கும் தன்மையது; புதிய எண்ணங்கள் வரும்போது அவற்றைப் பரிசீலித்து, உண்மைக்குப் புறம்பான வற்றை ஒதுக்கிக், காணும் அல்லது நிகழும் செயற்பாட்டுக்கு ஏற்ப நிற்கும் எண்ணங்களை மட்டும் சிறிது சிறிதாகச் சேர்த்துப் பெரிதாக என்றும் வளர்வதுதான் அறிவியல் அணுகுமுறையாகும்!

இந்த அறிவியல் அணுகுமுறையின் அடிப்படையும் ஒருவித நம்பிக்கையில்தான் அமைத்துள்ளது. என்ன அந்த நம்பிக்கை?

பகுத்தறிவின் காரணமாகச், சிந்தனைச் செழிப்பின் பயனாக அறிவியலாளர்கள் பொதுவாக ஒப்புக்கொண்டு செயல்படுகின்ற நம்பிக்கை தான் அது! அவர்கள் ஆழமாக நம்புகிறார்கள் — தம்மைச் சுற்றியுள்ள இந்த உலகம், இந்த அண்டம் உண்மையானது; பருப்பொருளால் ஆனது; அது மனிதனின் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டுக் குழப்பமின்றி ஒரு முனைப்பாக இயங்குகின்றது; அதில் ஏராளமான, புலன்களுக்கு எட்டியும் எட்டாத நிலையிலுமான, செயற்பாடுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன; அச்செயற்பாடுகளில் ஒரு ஒழுங்குமுறையும் எளிமையும் உள்ளன; அவை யாவும் எந்தவிதப் புலன் விசாரணைக்கும், பரிசோதனைக்கும் உட்பட்டவை; இந்தச் செயற்பாடுகளெல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்பற்றுக் குழப்பமாகத் தோன்றினாலும், அவற்றுக்குள்ளே ஓர் ஒழுங்கமைப்பு உண்டு; அந்த ஒழுங்கமைப்பை மனிதனால் அறிய முடியும்.'' என்று.

இந்த ஒழுங்கமைப்பை அறிய அறிவியலாளர்கள் எப்படித் தம் பணியைத் தொடர்கிறார்கள்?

அறிவியலாளர்கள் தாம் காணும், உணரும், எண்ணும் ஒவ்வொரு செயற்பாட்டுக்குள்ளேயும் ஒளிந்து நிற்கும் உண்மைகளைக் கண்டு, சீர்படுத்தி, அவற்றிற்குள்ளே இருக்கும் உறவுகளை நமக்கு விளக்குகிறார்கள். அந்த உள்ளுறவுகளை எல்லா நாட்டிலும் எல்லாச் சிந்தனையாளர்களும் விரும்பினால் தாங்களே பரிசோதித்து அறியும்படி எளிதான விதிகளாகக், கோட்பாடுகளாகக், கருதுகோள்களாக அமைக்கிறார்கள். அவர்கள் வகுக்கும் விதிகள், கோட்பாடுகள் கருதுகோள்கள் இரண்டு வகைகளிலே சிறந்து முக்கியம் பெறுகின்றன. முதலாவதாக, அவை புதிய கண்டுபிடிப்புகளுக்குத் திசைகாட்டிக் கொண்டிருக்கின்றன; இரண்டாவதாக, அவற்றைக் கொண்டு கருவிகளைப் படைத்து மனித இனத்தின் வசதிக்கும் முன்னேற்றத்திற்கும் உறுதுணை செய்கின்றன. அறிவியலாளர்கள் இப்படி வகுக்கும் விதிகள், கோட்பாடுகள், கருதுகோள்கள் ஒரு காலத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டவைகளாக இருக்கலாம் — பிற்காலத்தில் தூக்கி எறியப்படலாம்—ஆனால் அவ்விதம் தூக்கி எறியப்படுமுன்னர் மேலும் ஒரு சிறந்த விதியை, கோட்பாட்டை, கருதுகோளை உருவாக்க அந்தத் தப்பான விதி தடம் அமைத்துக் கொடுத்துவிடும்! அறிவியலின் அற்புதமே இங்கு தான் இருக்கின்றது!

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கிரேக்க நாகரிகம் தலைதூக்க ஆரம்பித்தபோதுதான் அறிவியல் ஒரு புத்

துணர்வைப் பெற்றது. முதன்முதலாக எந்த ஒரு விதியையும், கோட்பாட்டையும், கருதுகோளையும் பரிசோதனை மூலம் உறுதி செய்து பார்க்கும் முறை வந்தது. கண்டறிந்த புதுமையொன்றை, மீண்டும் மீண்டும் ஒரே சூழ்நிலையில் உருவாக்கிப் பார்க்க முயன்றனர். ஆய்வுக் கூடங்கள் உருவாயின. ஆய்வுக்கூடமென்பது மிகச்சிறிய அளவிலே அமைந்து, மிகக் குறைந்த செலவிலே ஒரு வினைவை, கண்டுபிடிப்பை நிலைநாட்டும் இடம்தான். அறிவியலாளருக்கு எல்லா இடங்களுமே ஆய்வுக் கூடங்கள்தாம். வாந் எல்மாண்டு என்னும் பிரசல்சு நாட்டு அறிஞர் ஏறத்தாழ முந்நூற்று முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் நடத்திய ஓர் ஆய்வைக் காணுங்கள்—

மிருகங்களின் உடல்களிலும், தாவரங்களின் உறுப்புக்களிலும் தண்ணீர் மிகுந்துள்ளது என்று அவர் நம்பினார். அதை உறுதிப்படுத்திக் காட்ட ஒரு பரிசோதனையைச் செய்தார். எப்படிப்பட்ட பரிசோதனை? வியப்பிலும் வியப்பான பரிசோதனை!

மிகப்பெரிய அளவில் மண்ணை எடுத்து உலர்த்தி, அதிலிருந்து சரியாக இருநூறு பவுண்டு எடையளவை ஒரு பெரிய மட்பாண்டத்தில் போட்டு, ஐந்து பவுண்டு எடையுள்ள ஒரு (மரமாகும்) செடியை அதில் நட்டு வைத்தார்; மட்பாண்டத்தில் மேற்புறத்தை இரும்புத் தகடு கொண்டு நன்றாக மூடித் தூசு போன்றவை உள்ளே புகமுடியாதபடியும், தவறிப் போயும் மண் வெளியே வந்துவிடாதபடியும் செய்தார்; ஐந்து ஆண்டுகளுக்கு நன்றாக வடிகட்டிய தண்ணீரையும் மழைநீரையும் மட்டுமே ஊற்றிச் செடியை மரமாக வளர்த்தார்; ஒவ்வொரு நாளும் கீழே விழும் இலைகளை விடாமல் பொறுக்கி எடுத்துச் சேர்த்து எடைபோட்டு வைத்தார்; ஐந்து ஆண்டுகள் கழித்து மரத்தை வேரோடு வெளியே பிடுங்கி, வேரில் ஒட்டியிருந்த மண்ணையெல்லாம் தட்டிவிட்டுச் சிதறிப் போகாமல் சேர்த்து எடை போட்டார்; மரத்தின் எடை நூற்றறுபத்தொன்பது பவுண்டுகளாக — நூற்றறுபத்துநான்கு பவுண்டுகள் கூடி— இருக்கக் கண்டார்; பரிசோதனையின் முடிவாக மட்பாண்டத்திலிருந்த மண்ணை மீண்டும் எடைபோட்டுப் பார்த்தார்; மண்ணின் எடை சரியாக இருநூறு பவுண்டுகளே இருந்தது! இந்தப் பரிசோதனையின் முடிவு? — ''மண் எடையில் கூடவில்லை; தண்ணீர் மட்டும்தான் சேர்க்கப்பட்டது: செடி மரமாக வளர்ந்ததில் கூடிய நூற்றறுபத்துநான்கு பவுண்டு எடையும் தண்ணீரிலிருந்துதான் வந்திருக்க வேண்டும்.''

நம்மை வியப்பில் ஆழ்த்துவது எல்மாண்டு செய்து முடித்த பரிசோதனையின் தன்மையல்ல — அவர் ஒவ்வொரு குறிப்புக்கும்

காரணம் காண முயன்ற தன்மைதான்! அவர் மரத்தை எரித்துச் சோதித்திருந்தால் வேறு சில பொருட்களைப் பார்த்திருக்கலாம். மண்ணின் எடை இருநூறு பவுண்டாகவே இருந்தது அவர் எடை போட்ட விதத்தில் எதிர்பாராமல் வந்துவிட்ட ஒரு முடிவுதான்! எடைபோடப் பயன்படுத்திய கருவியில் குறை இருந்திருக்கலாம் அல்லது பரிசோதனைக்கு முன்னால் உலர வைத்ததற்கு ஒப்ப, பரிசோதனைக்குப் பின்னால் மண்ணை உலர வைக்காமல் போயிருக்கலாம். இருநூறு பவுண்டு மண்ணை உலர வைப்பதென்பது எளிய செயலா என்ன? இந்தத் தவறுகளை யெல்லாம் விட அவர் செய்த மிகப்பெரிய தவறு மரத்திற்கு வேர்களின் வழியாகத் தண்ணீர் மட்டுமே உட்சென்றது என்று நம்பியதுதான். காற்று மண்டலத்திலிருந்த இலைகளின் மூலம் சில பொருட்கள் உள்ளே செல்லக் கூடுமென்று அவர் சந்தேகிக்கவில்லை. மரம் காற்று மண்டலத்திலிருந்து கரியமில வாயுவை இலைகளின் மூலம் உட்கொண்டு வேர்களின் மூலம் வரும் தண்ணீரோடு அதை இணைத்துத் தனது உடம்பை உண்டாக்குகின்றதென்னும் உண்மை வெகுகாலத்திற்குப் பின்னர்தான் மக்களுக்குத் தெரியவந்தது. வியப்புக்குரிய செய்தி என்னவென்றால் கரியமில வாயுவைக் கண்டுபிடித்தவரே இந்த எல்மாண்டுதான்! ஆனால் காற்றில் அது 0.04 % உள்ளது என்பது அவருக்குத் தெரியவில்லை!

எல்மாண்டின் இந்தப் பரிசோதனை தவறான ஒரு முடிவைக் கொடுத்ததுதான் என்றாலும், வேதியியல் வளர்ச்சியில் அது மிக முக்கியமான ஒன்றாகும். இந்தப் பரிசோதனைதான் முதன்முதலாக அளவுக் குறிப்புகளோடு பதிவு செய்து நடத்தப்பட்ட பரிசோதனையாகும்; மரம் எவ்வளவு எடையைக் கூட்டிக் கொண்டது, மண் எவ்வளவு எடை குறைந்தது என்று எல்மாண்டு அளந்தார்; மேலும் இப்பரிசோதனை கட்டுப்படுத்திய தன்மையில் நடத்திய ஒன்றாகும். முடிவுகளைப் பாதிக்கும் செயல்கள் என்று எவற்றையெல்லாம் அவர் நம்பினாரோ அவற்றையெல்லாம் அவர் கட்டுப்படுத்தினார்—மண்ணை உலர்த்தினார் — மட்பாண்டத்தை மூடிவைத்தார் — சுத்தப்படுத்தப்பட்ட நீரையும், மழை நீரையும் மட்டுமே ஊற்றினார் — இலைகளை எடை போட்டார் — அவர்காலத்து அறிவியலறிவின் தன்மைக்கு இச்செயல்களெல்லாம் எதிர்பார்ப்புகளுக்கெல்லாம் அப்பாற்பட்டனவாகும்.

எல்மாண்டின் அன்றைய பரிசோதனையையோ, இன்று விண்வெளிக்குச் செயற்கைக் கோள் விடும் பரிசோதனையையோ உற்று நோக்கினால் ஒன்று நன்றாகப் புலப்படும். அது,

1) செயற்பாடுகள், 2) உண்மைகள், 3) கருதுகோள்கள்...

இந்த மூன்று தூண்களின்மீதும் நிற்கும் கட்டிடம்தான் அறிவியல் என்பது!

'செயற்பாடுகள்' என்பன இயற்கையில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளும்தாம்; அவை உண்மையானவை; — தூக்கி எறிந்த கல் கீழே விழுகிறது; மெழுகுவர்த்தி எரிந்து கொண்டிருக்கிறது; ஆகாய விமானம் பறந்து கொண்டிருக்கிறது — இவையெல்லாமே செயற்பாடுகள்தாம்; இந்தச் செயற்பாடுகளுக் கெல்லாம் முக்கியத் துவம் கொடுப்பதுதான் அறிவியல் அணுகுமுறையின் தலையாய பண்பாகும். செயற்பாடுகள்தாம் அறிவியலறிவு வளர்வதற்கு அடிப்படைத் தளங்களாகும்.

'உண்மைகள்' என்பன ஒரு செயற்பாடு பற்றிய எல்லோ ராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விவரிப்புகள்தாம்—ஒரு செயற்பாடு பற்றி எவ்வளவுக்கெவ்வளவு சரியாகத் துல்லியமாக விவரிப்பு இருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு உண்மையை உண்மை என்று நாம் கொள்ளமுடியும். எரியும் மெழுகுவர்த்தி, ஒரு செயற் பாடு. அதைப்பற்றி எத்தனை உண்மைகள் நமக்குத் தெரியும்?— வெளிச்சம் வருகிறது, அஃது ஓர் உண்மை; கரிப்புகை போகிறது. அஃது ஓர் உண்மை; அஃதை அணைத்துவிடலாமென்று கையால் திரியை நசுக்கிவிட, சூடுபட்டுக் கையை உதறுகிறோம், அதுவும் ஓர் உண்மை. சில நேரங்களில் சில செயற்பாடுகள் பற்றிய உண் மைகள் நம்மை எளிதாக ஒப்புக்கொள்ள வைத்துவிடக் கூடும் — சூரியனும் விண்மீன்களும் ஒரு திசையில் எழுந்து மறு திசையில் விழுந்துவிடும் (பொய்யான) உண்மையை நாம் எளிதாக நம்பிவிடு கிறோமல்லவா? சில நேரங்களில் சில உண்மைகள் தமக்குள்ளே சில அடிப்படைகளைப் பொதுவானவையாகக் கொண்டிருக்கும்— தூக்கியெறியப்பட்ட ஒரு கல் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பூமியின் மேல் விழுவதோடு, எப்போது எறிந்தாலும் அப்படியே விழுகிறது; அதேபோன்று, அதைவிடப் பெரிய வேறு கற்களும் அப்படியே கீழே விழுகின்றன! இந்த உண்மைகள்தாம் எல்லாப் பொருட் களும் விழுகின்றன' என்ற பொதுவான உண்மையாகிறது. இயற்கைபற்றிய ஓர் உண்மையைத்தான் கீழே விழும் பொருட்கள் மூலம் நாம் அறிகிறோம்!

செயற்பாடுகளின்போது என்ன நடக்கிறதோ அது நடந்து தான் தீரும். இந்த முக்கியமான இயற்கையின் பண்பைத்தான் நாம் உண்மைகளாக உருமாற்றம் செய்து முன் வைக்கிறோம். அதனால்தான், மிக எச்சரிக்கையாக, நுண்ணிய, தெளிந் தேர்ந்தெடுப்பாக உண்மைகளை—உண்மைகளாக அறிவிக்க வேண்டி

யுள்ளது. அவற்றைப் பொருத்துத்தான் செயற்பாட்டின்போது என்ன நடந்ததென்பதைப் பிறரும் ஏற்றுக்கொள்ளும்படி சொல்ல முடியும். உண்மைகள் என்னவோ மேற்கண்டவாறு உறுதி யானவைதாம்! ஆனல் அவற்றின் முக்கியத்துவம் மாறக்கூடும். உண்மைகளே செயற்பாடுகள் அல்ல — அவை செயற்பாடுகளின் விவரிப்புத்தாம் — அவை செயற்பாடுகளின் குறியீட்டுச் சுருக்க விளக்கங்கள்தான் — அவை, எந்த முன்கருத்துக்களோடு, எண்ணங்களோடு ஒருவர் செயற்பாடுகளைக் கொடுக்கிருரோ, அவற்றைப் பொருத்தே அமைவன. ஓர் எடுத்துக்காட்டை முன் வைப்போம் — கீழேவிழும் பொருட்களின் விவரிப்பில் நேரம், தூரம், வேகம் போன்ற கருத்துக்கள் அடங்கியுள்ளன. வெவ்வேறு விதமான கருத்துக்களோடு ஒரு செயற்பாட்டை அணுகினல், வெவ் வேறு விதமான உண்மைகள் கிடைக்கும். உண்மைகள் உறுதி யானவைதாம் — ஆனல் நாம் எடுத்துக்கொண்ட கருத்துக்களுக்கு ஏற்பத்தான் செயற்பாட்டின் விவரிப்பு அமைகிறது. நாம் எடுத்துக் கொண்ட கருத்துக்களும், விவரிப்புமுறையும் செயற்பாடுகளில் இல்லை. அறிவியல் வளர்ச்சி என்பது, கருத்துக்களின் வளர்ச்சி யைப் பற்றித்தான் பெரிதும் உள்ளது.

நம்மிடம் இப்போது ஓர் அனுபவம்பற்றிய, செயற்பாடுபற்றிய, சரிபார்க்கப்பட்ட சில உண்மைகள் இருப்பதாகக் கொள்வோம். அந்த அனுபவத்தை ஒட்டுமொத்தமாகக் காணவேண்டுமானல். நாம் நம்மிடமுள்ள உண்மைகளினூடே சில தொடர்புகளை எற் படுத்திக் கொண்டு, அந்த அனுபவம் எப்படி நிகழ்ந்தது என்ற விளக்கத்தைக் காண முற்படுவோம். உண்மைகளை இனம்பிரித்துத் தொடர்பு கொள்ள வைத்த செயலின் மூலம் நாம் நமது எண்ணங் களை உட்புகுத்தி விட்டோம். பின்னர் மனதுக்குள்ளே நாம் ஓர் ஒருங்கிணைந்த, முன்வைத்த உண்மைகளுக்கிணங்கிய ஒரு வரை படி அமைப்பை வருவித்து உருவாக்க முற்படுகிருேம். அப்படி ஏற்படுத்திக் கொண்ட மன உருவகத்தில். தொடக்கத்தில் தனித்து நின்ற உண்மைகள் தமக்குள்ளே தர்க்கரீதியாகத் தொடர்பேற் படுத்திக் கொண்டமை இப்போது உணருகிருேம். ஒரு கருதுகோள் உருவாகிவிட்டது! கருதுகோளின் உள்ளுறுப்புக்கள் நாம் எடுத்துக் கொள்ளும் முன் எண்ணங்கள் அல்லது கோட்பாடுகள்தாம்.

ஒரு கருதுகோளை உருவாக்க முற்படுவோமா?

இப்படி ஆரம்பிப்போம்.

பூமி தன்னைத்தானே தனது அச்சில் சுழல்கிறது!

சூரியனை அது சுற்றி வருகிறது!

அதனுடைய சுழலும் அச்சு சூரியப் பாதைக்குச் சாய்ந்துள்ளது!

இந்தக் குறிப்புகள் நம் முன்னால் இருக்கும் நம்பிக்கைகள். இதனால் நம்மால் உருவாக்கம் பெறும் கருதுகோள்—

''சூரியன் கிழக்கில் உதித்து வருவதையும்,
மேற்கில் மறைந்து போவதையும்,
பூமியில் பருவங்கள் மாறிமாறி வருவதையும் விளக்க முடியும்''

இப்படி முன்வைக்கப்படும் நம்பிக்கைகளுக்குள் ஒரு தர்க்க அமைப்பை உண்டாக்க முடிந்தால் அதுதான் கருதுகோள். ஒரு கருதுகோளின் மூலம் நாம் முன்வைக்க விரும்பும் செய்திகளெல்லாம், நாம் எடுத்துக்கொண்ட முன் நம்பிக்கைகளிலிருந்து பிறக்கும் தர்க்க நியதிகளேயாகும். இந்தத் தர்க்க நியதிகள் அனைத்துமே நாம் வெளிப்படையாக உணரும் குறிப்புக்களாகும். இந்த நியதிகளைக் குறியீட்டு மூலமும் முன்வைக்க முடியும்—

''முருகன் எப்போதும் கந்தனைத் தொடர்கிறான்;
கந்தனைக் காண்கிறோம் இப்போது;
அப்படியானால், முருகன் பின்தொடர்வான்.''

ஒரு கருதுகோளிலிருந்து ஏராளமான குறிப்புக்களை வெளிக் கொணர முடியும். உண்மைகள் அல்லது செயற்பாடுகள் அந்தக் குறிப்புக்களுக்குள் அடங்கியிருக்கும். நாம் மிகவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், ஒரு கருதுகோளின் வழியாக உண்மைகள் தனித்தனியே நில்லாமல், அவையெல்லாம் ஒருங்கிணைந்த ஒரு ஒப்புக்கொள்ளும் தர்க்க அமைப்பாக அமைந்து விடும் சீரிய பாங்குதான்,

ஒரு கருதுகோள் அதற்குத் தொடர்பான நமது அனுபவத்தை மேலும் மேலும் நீட்டிக்கும். ஒரு கருதுகோளிலிருந்து உணரப் படும் குறிப்புக்களில் பல தொடக்கத்தில் நாம் எடுத்துக்கொண்ட உண்மைகளில் அடங்காமலும் நிற்கக்கூடும். ஒரு கருதுகோளை உருவாக்கும்போது தேவையற்ற நிலையில் நின்ற சில உண்மைகள், பின்னால் நாம் உருவாக்கிய தர்க்க அமைப்பில் இணைந்து விளக்கம் பெறுவனவாகிவிடும், அத்தோடு, சில வெளிப்படைக் குறிப்புக்கள் இதுவரை கண்டிராத சில உண்மைகளையும் முன்கொண்டு வந்து விடும். அந்தப்புதிய உண்மைகள் சரியானவையா என்று காண புதிய பரிசோதனைகளை நாம் செய்ய வேண்டிவரும். அந்தப் பரி சோதனைகளில் நாம் வெற்றிபெற்றால் நமது கருதுகோள்களுக்கு மேலும் வலுக்கூடும். பரிசோதனை தோல்வியில் முடிந்தால், கருது கோளின் மீதான நமது நம்பிக்கையை அது குறைக்கும். அப் போது — புதிய உண்மைகளை விளக்க, நமது கருதுகோளை, அதாவது நாம் தொடக்கத்தில் எடுத்துக்கொண்ட முன் நம்பிக்கைகளை,

மாற்றிச் சீர்படுத்தவோ, பயனில்லையென்று உணரும் நேரத்தில் அந்தக் கருதுகோளையே தூக்கி எறியவோ வேண்டும்.

ஆக. இப்போது நமக்கு ''உண்மைகள்தாம் அறிவியலின் அடிப்படை'' என்ற கூற்றின் முனைப்புப் புரியவருகிறது. ஒரு கருதுகோள் உண்மைகளின்பாற்பட்டதாக இல்லையென்றால், அதைத் தூக்கியெறிவோமேயன்றி, உண்மைகளையே ஒதுக்கிவிட முடியாது, கூடாது.

பரிசோதனைக் கூடத்தில் பரிசோதனைக்குட்படும் பொருள்தாம் முதன்மைத்துவம் கொண்டது. அப்பொருளின் பண்புகள்தாம் மிக முக்கியமானவை. பரிசோதனைப் பொருள் ஒரு வாயு என்று கொள்ளுவோம். அந்த வாயு ஒரு 'விதி'க்கு உட்படவில்லையானல், அந்த வாயுவின் பண்பை சரிகட்ட முற்படுவதில்லை; அதற்கு மாருக அந்த முடிவு நாம் ஒப்புக்கொண்டிருந்த 'விதி'யின் தலை விதியைச் சுட்டிக்காட்டிவிடும். ஒரு மிகச்சிறிய உண்மை ஒரு மிகப் பெரிய கருதுகோளைக் கொன்று சுவை பார்த்துவிடும்!

ஆகவே, எந்த ஒரு கருதுகோளுக்கும் இரண்டு மூக்கியக் குணங்கள் உண்டு. அது,

1) தன்னுள்ளே முரண்பாடற்று இருக்கவேண்டும்,

2) நமது அனுபவத்திற்கு ஒட்டியதாக இருக்கவேண்டும்.

தனக்குத்தானே முரண்பட்டு நின்ருல், அஃது ஒரு வரையறையில் நின்ற நியதியாகாது — அதைக்கொண்டு நம் பகுத்தறிவுக்கு ஒப்பும் அறிவுச் செல்வத்தை அடைய முடியாது. அனுபவத்தோடு ஒட்டி நிற்காமல் போனல். அஃதை எதற்காக நாம் உருவாக்கி ேனமோ, அந்தப்பயனே இல்லாமற் போய்விடும்.

இதுவரைக்கும் நாம் குறிப்பிட்டவை அறிவியலறிவு பற்றிய சில சிறப்பான குணங்களாகும். பொதுவாக அறிவியலறிவை இரண்டுவகைப் படுத்தலாம்: நாம் எதைக் காண்கிருேமோ அதன் விவரிப்பாக அஃது இருக்கலாம்; அல்லது, நாம் காண்பதின் விளக்கமாகவும் அஃது இருக்கலாம்—

''சூரியனும், விண்மீன்களும் உதிக்கின்றன; உச்சிக்கு வரு கின்றன; பின் மறைகின்றன!''

''பூமி தனது அச்சில் சுழல்கிறது; அதனல் விண்ணுலகக் கோள் கள் உதித்து மறைவதாக ஒரு தோற்றத்தை அது கொடுக் கிறது!''

இவற்றில் முதலாவது குறிப்பு நேரடி விவரிப்பாகும்; இரண்டாவ தாகச் சொல்லப்பட்டது ஒரு விளக்கமாகும். இந்த இரண்டுவகை விவரிப்பு விளக்கவகை அறிவுகளைத் துல்லியமாக ஒன்றுக்கொன்று

சார்பற்ற நிலையில் பிரித்துணர முடியாது. ஆனால், அறிவு வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட வேளையில், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் அவற்றின் வேறுபாடு நன்றாகத் தெரியும். விவரிப்பும் விளக்கமுந்தான் அறிவியலின் இரண்டு கண்கள். இந்த இரண்டு கண்களின் கூட்டுப் பார்வைதான் இயற்கையில் நிகழும் செயற்பாடுகளை நமது பகுத்தறிவுக்கு ஒப்பக் காட்டுகின்றன.

அறிவியல் அறிவுக்கு இன்னுமோர் அற்புதமான குணம் உண்டு — நாளுக்குநாள் தனக்குத்தானே பெருக்கிக் கொண்டே போகும் தன்மைதான் அது. உண்மைகள் தகுதி பிரிக்கப்பட்டு, பொதுவான தர்க்க நியதிகளாக உருப்பெற்று, பின் ஒரு கருதுகோளுக்கு வழி வகுக்கின்றன; மற்ற உண்மைகளுக்கு முன்னால் அந்தக் கருதுகோள் சரிபார்க்கப்படுகிறது; அற்றைய அறிவு நிலைக்கு ஒப்பச் சரிபார்க்கப்பட்ட கருதுகோள், மேலும் சில புதிய கருதுகோள்களை உருவாக்க உண்மைகளாகப் பயன்படுத்தப் படுகின்றன; இந்த வளர்ச்சிமுறை தொடர்ந்து நடைபெறுகின்றது இயற்கையின் செயற்பாடுகளை முடிந்த அளவுக்கு மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பொதுவகைக் கருதுகோள்களின் மூலம் விளக்கும் மனிதனின் நோக்கம் நிறைவேற வளர்ச்சி நாள்தோறும் நடைபெறுகிறது.

தமிழ் மொழியும்....

என்னருமைத் தமிழ்நாட்டை
எழிற்றமிழால் நுகரேனோ
செவியில் யாண்டும்
கன்னல்நிகர் தமிழிசையே
கேளேனோ கண்ணெதிரில்
காண்பவெல்லாம்
தன்னேரில் லாததமிழ்த்
தனிமொழியாய்க் காணேனோ
இவ்வை யத்தில்
முன்னேறும் மொழிகளிலே
தமிழ்மொழியும் ஒன்றெனவே
மொழியேனோ நான்!

—பாவேந்தர் பாரதிதாசன்

பெரியகுளத்துக் கல்வெட்டில்

—: மேல்நெடுங்களநாடு :—

புலவர் து. இராசகோபால்

முன்னுரை :

பெரியகுளம் – மதுரை மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். வட்டத் தலைநகர். இத்தொகுதியில் பழைய கற்காலம்[1] இடைக் கற்காலச்[2] சின்னங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

பெரியகுளம் நகரத்துக் கல்வெட்டுகள்[3] 'பெரிய குளத்தை உள்ளிட்ட நிலப்பரப்பினை மேல்நெடுங்களநாடு' என்று ஒரு நாட்டமைப்புப் பிரிவாக அறிவிக்கிறது.

இந்நாட்டின் வரலாறு பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னர் மிகத் தொன்மையுடையதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

அந்த நாடு குறித்து இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.

மேல்நெடுங்களநாடு
— *ஓர் அறிமுகம் :*

மேல்நெடுங்களநாடு எங்கே குறிக்கப்பட்டுள்ளது? பெரியகுளம் இராசேந்திர சோளீச்சுரமுடைய நாயனார் கோயிலின் அகத்தும் புறத்தும் கல்வெட்டுகள் உள்ளன.[4] அவை துணுக்கு வடிவம் கொண்டவை. அக்கற்களில் மேல்நெடுங்களநாடு என்ற தொடர் குறிக்கப்பட்டுள்ளது.

மேலும் கயிலாசநாதர் கரடு — உய்யவந்த ஈச்சுரமுடைய நாயனார் கற்றளிச் சுவரிலும்'[5] இஃது ஆளப்பெற்றுள்ளது.

முன்மொழிதலும்
—*வழிமொழிதலும்:*

இவை முறையே மாமன்னன் முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் ஆட்சியாண்டான பதினைந்து–பதினேழில்[6] வெளியிடப் பெற்றவை. மற்றொன்று பத்தொன்பதில்[7] பதிவு செய்யப் பட்டவை.

இதனை வழிமொழிந்து இத்திருக்கோயிலின்[8] உட்புறத்தில் காணப்படும் ''எம்மண்டலமும் கொண்டருளிய குலசேகர பாண்டி

யனின் இருபத்துஆறாவது [9] ஆட்சியாண்டுச் செய்தியும் மேற்கண்ட நாட்டமைப்புப் பெயரினைத் தாக்கல் செய்து வழிமொழிகிறது.

உள் நாடுகளின் அமைப்பு:

பாண்டியப் பேரரசு பல்வேறு சிறுநாட்டுப் பிரிவுகளைத் தன்னுள் கொண்டிருந்தது. அண்டநாடு, அளநாடு, தென்களவழிநாடு என்பன இடம்பெறத்தக்கன. நெடுங்களநாடும் அவ்வாறே, அது ''மேல்'' என்னும் அடைமொழியால் ஆட்சி செலுத்துவது. ஆதலின் மேல்நெடுங்களநாடாக நடைமுறையில் பயிலப்பட்டு வந்தது.

வகை செய்யப்பட்டதா?

மேல்நெடுங்களநாடு எந்நாளில் வகை செய்யப்பட்டது? நிலைநாட்டக்கூடிய சான்றுகள் கிடைக்கவில்லை.

சங்க நூல்களோ — தலபுராணங்களோ — பாண்டி மண்டல சதகம் போன்ற நூல்களோ துணைபுரிவதாய் இல்லை.

சமய குரவர்கள் வந்து வணங்கிய தலமாகவும் தென்படவில்லை.

நாடும்—பெயரும்:

நாடுகளின் பெயர்கள் எல்லாம் ஊர்களின் அடியாகப் பிறப்பதுண்டு.[10] மயிலாடுதுறைக்கு அணித்ததாக அமையப்பெற்ற ''கொரநாடு'' என்பதை இங்கே காட்டலாம்.

இனி, நாடு என்று சொல்லத்தக்க அளவுக்குப் பெரிதாயிருந்த ஊர்கள் தனியூர் என நிலவியிருக்கின்றன.† அதனடிப்படையில் நெடுங்களமும் தனியூராகச் சிறப்புற்றிருக்கலாம். பின்னர் நாட்டிற்கு உரிமை பூண்டு மேல்நெடுங்களநாடு என வழக்கில் பேசப்பட்டிருக்கலாம்.

''பண்டைநாளைச் சேரமன்னர்கள்'' எனும் வரலாற்று நூலை எழுதிய உரைவேந்தர் ஔவை சு.துரைசாமி அவர்கள் ''நெடுமிடல் அஞ்சி திண்டுக்கல்லுக்குத் தெற்கிலிருக்கும் பெரியகுளம் பகுதியில் தலைவனாக இருந்தான். அவனது நாடு நெடுங்களநாடு என்று இடைக்காலத்தே பெயர் பெற்றிருந்ததாக'' எழுதியுள்ளார்.[11]

ஊரும் பேரும்:

சில ஊர்கள் நெடுமையும் குறுமையும் பெற்று, அவற்றின் தன்மையால் பெயர் சிறக்கப் பெற்று விளங்குவதுண்டு. நெடுங்

களம்—இப்பெயருடையதான ஊர் பெரிய குளத்தின் விரிவில் இந் நாளில் காணப்படவில்லை. ஆயினும் எண்டப்புளி புதுப்பட்டிக்கு அண்மையில் நெடுங்குளம் எனப் பெயர்கொண்ட மிகப்பெரிய தொரு நீர்நிலை உளது.

நெடுங்களம் எனக் குறிக்கும் மற்றொரு நகரம் தேவாரத்திற் பாடப்பெற்றுள்ளது. திருநாவுக்கரசர் அவ்வூரை நெடுங்கள மாநகர்'' எனப் போற்றுகிறார்.

களம்—சமவெளியான இடம். இதன்வழி நின்று நீட்சியால் நீடித்து உயர்ந்த இடமாயிற்று. ''மேல்'' என்ற முன்னுரிமை யினை ஈர்த்து மேல்நெடுங்களநாடு ஆயிற்று என்பதும் ஆய்வுக்குட் பட்டதே.

நெடுங்களநாடு

பெயர் விளக்கம்:

நெடுமை + கள + நாடு = நெடுங்களநாடு[12]

மேல்—மேற்கு—மேடு—உயர்வு.

''மேலின் நாமந்தான் உம்பர் மேற்குமாம்''
எனும் சூடாமணி நிகண்டு கொண்டு அறியலாம்.

பொதுவாக மக்கள் பேச்சு வழக்கில் மேற்கு என்பதற்கு மேடு என்றும் கிழக்கு என்பதற்குப் பள்ளமென்றும் திசைச்சொற்களுக்குப் பொருள் கூறுவர்.[13]

எனவே மேல்நெடுங்களநாடு கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே வாழ்வும்—வளமும் கொண்டு விளங்கியிருக்கிறது என்பதை ஓரளவு அறியலாம்.

மேலும் இங்கே வளநாட்டைப் பொருட்படுத்தாமல் நாட்டை மாத்திரம் குறிக்கும் வழக்கம் பாண்டியர்கள் வழங்கி வந்த முறை களில் ஒன்றெனச் சுட்டலாம்.[14]

அத்துடன் இவ்வருள் நிலையத்தினுள் இருக்கும் ஒரு துண்டுக் கல்வெட்டின் முற்பாதி அழிந்து இடையில் ''மண்டலம்'' என்ற சொற்றொடரை நமக்குக் காட்டி அதனை எடுத்துக்கொள்ள அனுமதியளிக்கிறது. என்றாலும் பிற்பகுதி அழிவுற்றதால் அங்கே யும் தடை ஏற்பட்டு விடுகிறது.

முடிவுரை:

இதுகாறும் எடுத்துக் காட்டிய குறிப்புகளிலிருந்து நெடுங்களம்

என்னும் பெயருடைய ஓர் ஊர் நிலைத்த புகழுடன் இன்றுள்ள பெரிய குளம் பகுதியில் இருந்தது.

அது ''நாடு'' என்று ஆட்சிப்பேரேட்டில் மலர்ந்தது. ''மேல்'' என்னும் தகுதியால் மணம் பரப்பியது. மேல் நெடுங்களநாடு என அரசியல் பிரிவில் அரசோச்சியது.

இவ்வாறு பல்லாற்றான் மேன்மையுடன் நின்ற மேல்நெடுங் களநாட்டின் வ ர லா று எப்படியோ வழக்கிலிருந்து வழுக்கிச் சென்றது வரலாற்றுத் தாகத்தார்க்கு மாபெரும் பேரிழப்பே.

—:[(o)]:—

அடிக்குறிப்பு:

1. Indian Archaeology-1960-61. P. 5.
2. தமிழ்நாடு-தொல் பழங்காலம்-பக். 125.
3. பெரியகுளம். இராசேந்திர சோளீச்சுரம் — கயிலாசநாதர் கரடு—உய்யவந்த ஈச்சுரம்.
4. A. R. E. 409 of 1907
5. A. R. E. 416 of 1907
6. A. R. E. 411 of 1907
7. A. R. E. 416 of 1907
8. A. R. E. 409 of 1907
9. ,,
10. தி. வை. சதாசிவ பண்டாரத்தார்-பாண்டியர் வரலாறு-பக். 170.

‡. டாக்டர் கே. கே. பிள்ளை-சோழர் வரலாறு-பக். 422.

11. பக். 135
12. நன்னூல்-219
13. மயிலை, சீனி. வேங்கடசாமி. அஞ்சிறைத்தும்பி
14. தி. வை. சதாசிவபண்டாரத்தார்-பாண்டியர் வரலாறு-பக். 171

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்

—பாரதியார்

எது எழுத்து

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

உலகில் வழங்கும் மொழிகளுள் வரைந்துணர்த்துதற்குரிய வரிவடிவம் பெற்று வழங்குவன பல. அவற்றுள்ஒலிவடிவிற்கேற்ப ஒருவாறு ஒற்றுமையுடைய வரிவடிவங்கள் அமைந்தவை சில. அறிவியலுக்கு ஒப்ப அமைந்தவை மிகச்சில.

காலத்தால் தொன்மை வாய்ந்த உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றாகிய தமிழ் மொழியில் இவ்வரிவடிவங்களைச் சான்றோர்கள் அமைத்துள்ளனர். ஒலி வடிவங்களை இலக்கணத்தால் வரையறை செய்துள்ளனர்.

இந்நெறியில் அமைந்த இலக்கண நூல்களுள் இற்றைக்குக் காலத்தால் முந்தியது தொல்காப்பியம். அதனுள் எழுத்து என்பதற்குரிய அமைவு இலக்கணம் உய்த்துணருமாறன்றி வெளிப்படையாகத் தனித்துக் கூறப்பெறவில்லை. முதன்முதலாகப் பவணந்தியார்தான் ''மொழிமுதற் காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்து'' என அமைதி கூறியுள்ளார். பரம்பரைச் செய்தியாகிய இலக்கண உரையுள் ''எழுதப்படுதலின் எழுத்தே'' என்பதொரு விளக்கம் காணப்படுகின்றது. இன்றைய மொழிநூலார் பெரும்பாலும் சொல்லாகவோ சொல்லுறுப்பாகவோ அமைந்து பொருளை வரையறை செய்யும் ஒலியே எழுத்து என்கின்றனர்.

இனித் தமிழ் எழுத்துக்களின் பிறப்பியல்பு கூறும் முறையில்

''உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல
திறப்படத் தெரியுங் காட்சி யான''

எனத் தொல்காப்பியரும்,

''நிறைஉயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
எழும்அணுத் திரள்உரங் கண்டம் உச்சி
மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்

வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே''

எனப் பவணந்தியாரும், இவரை ஒட்டிப் பின்னூலாரும் கூறியுள்ளனர்.

இனித் தொல்காப்பியர் ஓரளபிசைக்கும் — ஈரளபிசைக்கும் — ஒற்றுமெய் கெடுதல் — னகர ஒற்றும் — புள்ளியொடு நிலையல்— அளபிறந்துயிர்த்தல் என எழுத்தின் இயல்புகள் பற்றி ஆங்காங்கே கூறுகின்றார்.

இலக்கண நூலார் கருத்துக்களைத் தொகுத்து நோக்கினால் எழுத்தென்பது வளியிசையால் மனித முயற்சியிலாகிய உறுப்புகளின் செயல்களால் பிறந்து உயிர்த்தும் ஒற்றியும் இசைத்து வரிவடிவு பெற்று இலங்குவது புலனாகின்றது.

சிறிது ஆழ்ந்து நோக்கின் இவற்றொடு கூட இன்னும் சில அமைதிகளைப் பெற்றிலங்குவதையும், அவற்றைத் தொல்காப்பியர் உய்த்துணருமாறு கூறியுள்ளதையும் காணலாம். அவையாவன: இசை, ஒலி. ஓசை மூனறனுள் யாதானும் ஒன்றான் இயங்கும் என்பதும், உயிர்த்தல் ஒற்றல் அஃகுதல் என்னும் முயற்சி மூன்றனுள் யாதானும் ஒன்றனால் ஆகும் என்பதும்-உறுப்புக்களின் ஒரே முயற்சியால் வெளிப்பட்டுச் செவிப்புலனாகும் என்பதும்- தனித்துச் சொல்லினும் மொழிப்படுத்துச் சொல்லினும் தன் தன்மை கெடாதிருக்கும் என்பதுமாம்.

இனி இவற்றைத் தொல்காப்பியம் புலப்படுத்துமாற்றைக் காண்போம்.

தொல்காப்பியர் எழுத்துக்களுக்கு உயிர், மெய், ஒற்று, புள்ளி, சினை என்னும் குறியீடுகளை அமைத்திருப்பது வெளிப்படை. இவற்றுள் உயிரெழுத்துக்களைக் கூறுங்கால் இசைக்கும் (நூன்மரபு-3) எனவும், மெய்யெழுத்துக்களைக் கூறும்போது ஒற்றும் (உயிர் மயங்கியல்-19) புள்ளியொடு நிலையல் (நூன்-15) என்றும் கூறுகின்றார். சார்பெழுத்து ஒன்றற்கு ஆய்தம் - ஆய்தப் புள்ளி (மொழிமரபு-5) என்று பெயர் கூறியுள்ளார். ஒல் + து = என்பதே ஒற்று என்று ஆகும். ஒல் = ஒலி எனவே, மெய் ஒலிக்

கும் என்பது பெறப்படும். 'புள்ளி' என்பதும் அப்பொருளுடையதே யாம்.

இக்குறியீடுகளால் எழுத்துக்களுக்கு உயிர்த்தல், ஒற்றல், இசைத்தல், ஒலித்தல் என்னும் இயல்புகள் உள என்பது பெறப் படும். அஃகுதல்—அஃகாக்காலையான (மொழிமரபு-7) என்னும் அவர் கூற்றானும், நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும் (செய்யு-215) என்னும் விதியாலும், ஆய்தம் உள்ளதன் நுணுக்கம் எனப் பொருள் கூறுதலானும் (உரி-32) ஆய்தத்திற்கு முயற்சி இயல்பு அஃகுதல் என்பதும் அதற்குரிய வளி 'ஓசை' என்பதும் அவ் வோசை செவிப் புலனாதற் பொருட்டு ஒலியாகவே நிகழும் என்ப தும், பிறப்பியல் முதல் நூற்பாவான் எழுத்துக்கள் உறுப்புற் றமைந்து மக்களால் சொல்லப்படுவது என்பதும் ஏனைய நூற்பாக் களாலும் புள்ளியில்லா (நூன்-17) என்னும் நூற்பாவானும் எழுத்து ஒரே முயற்சியினால் ஆகும் என்பதும்; ஓரெழுத்தொரு மொழி (மொழி மர-12) என்னும் நூற்பாவானும் எல்லாச் சொல் லும் பொருள் குறித்தனவே (பெயரியல்-1) என்னும் நூற்பா வானும் சுட்டுச்சினை நீடிய (புணரியல்-17) ஐயென் நெடுஞ்சினை (மொழி-23) நெடுமுதல் குறுகும் (உருபியல்-7) முதலிய நூற்பாக்க ளானும் எழுத்துத் தனித்தும் தொடர்ந்தும் மொழியாகிப் பொருள் தரும் என்பதும் மொழிப்படுத்திசைப்பினும் தெரிந்து வேறிசைப்பி னும் (மொழி மர-20) என்னும் நூற்பாவான் தனித்துச் சொல்லி னும் தன் தன்மை கெடாதென்பதும் உணர்த்தினாராவார்.

வாயினும் கையினும் வகுத்த பக்கம் (அகத்திணை-44) என்பத னானும், அந்தரத்தெழுதிய எழுத்தின் மான (கற்பியல்-5) என்பத னானும் எழுத்து வரிவடிவில் எழுதப்பெறும் என்பதைப் புலப் படுத்தினாராவார்.

இனி இவற்றைத் தொகுத்து வரிசைப்படுத்திக் காணின் எது எழுத்து என்பதைத் தெளிவாக உணரலாம். அவையே எழுத்து என்பதற்குரிய இலக்கணமாகும். அவை வருமாறு:

1. மக்கள் முயற்சியால் அவர்தம் தற்கிழமை உறுப்புக்களால் ஆதல்.
2. ஓசை—ஒலி—இசை இம்மூன்றனுள் யாதானும் ஒன்றினான் இயங்குதல்.
3. உறுப்புக்களின் ஒரே முயற்சியால் வெளிப்பட்டுச் செவிப் புலனாதல்.

4. தனித்தோ இணைந்தோ மொழியாகித் திணைப்பொருளைச் சுட்டுதல்.

5. உயிர்த்தல் — ஒற்றல் — அஃகுதல் என்னும் மூன்றனுள் யாதானும் ஒன்றின் முயற்சியாலாதல்.

6. கட்புலனாதற்குரிய வரிவடிவை உடையதாதல்.

7. தனித்துச் சொல்லினும் மொழிப்படுத்துச் சொல்லினும் தன் பிறப்பமைதித் தன்மை கெடாதிருத்தல். என்பனவாம்.

இன்னும் மயங்குதல் திரிதல் முதலிய பண்புகள் உளவாயினும் அவை சிறப்பிலவாம். இவற்றுள் ஏழாவது இயல்பு சில மொழிகளில் அமைதலரிதாகலின் ஏனை ஆறும் இன்றியமையாத பொது விலக்கணமாகும் என அறியலாம்.

இனி ஓசை — ஒலி — இசை: இவற்றின் இயல்புகளையும், வேறுபாடுகளையும் சுருக்கமாகக் காண்போம்.

ஓசை — ஐம்பெரும் பூதங்களுள் நில முதலாய நான்கின் இயக்கத்தால் ஆகாய பூதத்தை இடமாகக் கொண்டு இயற்கையாக எழுந்து இடையறவுபடாமல் நிகழ்வதாகும். இதனை அநுகரணம் என்று வடசொல்லாற் குறிப்பிடுவர். இதனைக் காற்று — மழை —கடலலை—கடற்கானல் — மலைப் பிளப்பு — காட்டுளரி முதலியவற்றிற் கேட்டுணரலாம்.

ஒலி: இயற்கையும் — செயற்கையும் — ஆன பருப்பொருள்கள் ஒன்றோடொன்று மோதுவதாலும் நீர், நெருப்பு, காற்று இவை மாறுபட்டு இணைந்து பிரிவதாலும் நிகழ்வதாகும். இதனை இடி, மரம் முரிதல், பாறைப் பிளத்தல் முதலிய நிகழ்ச்சிகளிலும்; மருந்துகளைக் கூட்டிவெடித்தல் — கஞ்சம், தோல் முதலிய கருவிகளை மோதுதல்—கால் கொண்டு குதித்தல் — கை கொண்டு கொட்டுதல் முதலியவாக நிகழும் செயற்கை நிகழ்ச்சிகளிலும் கேட்டுணரலாம். து இடையறவு படும்.

இசை: குறிப்பிட்டதொரு பொருளைக் கொண்டு அதனிடமாக அரவத்தை எழுப்பி அதனை அளவைப்படுத்திச் செயற்கையாக நிகழ்த்துவதாகும். இது மக்கள், விலங்கு, பறவை முதலாய உயிரினங்களின் குரலிலிருந்தும் — நரம்புக் கருவிகளிலிருந்தும் நிகழும். இது தொடர்ந்தும் இடையறவுபட்டும் வேண்டியாங்கு நிகழும்.

செயற்கையாக எழுப்பப்பெறும் ஒலியையும் இசையையும் மாற்றியும் நிகழ்த்தலாம்.

இவற்றைச் செயற்கைக் கருவிகளின் வாயிலாக எடுத்துக் காட்டாகப் பார்ப்பின், குழற்கருவிகளில் 'ஒத்து' நரம்புக் கருவி களில் 'சுருதி வீணை' இவற்றின்கண் இடையறாது வரும் அரவமே ஓசையாகும். இதனைச் சுருதி என்பார் இசைநூலார். தோற்கருவிகள் கஞ்சக் கருவிகள் இவற்றின்கண் இடையிட்டு வரும் அரவமே ஒலியாகும். குரலாலும் குழற்கருவி-நரம்புக் கருவி களாலும் தொடர்ந்தும் இடையிட்டும் எழுப்பப்பெறும் அரவமே இசையாகும்.

இம்மரபைக்காட்டும் சில சொற்கள் வருமாறு: அலையோசை-இடி, ஒலி (முழக்கம்) வளியிசை —முரசொலி—பறைஒலி–யாழிசை —குழலிசை (குழலோசை என்பதும் மரபு) — குயிலிசை—குரட்டை ஒலி—குரலிசை முதலியன.

செயற்கைப் படுத்தும் பொழுது ஒலி இசையாகவும் இசை ஒலி யாகவும் மாறும் என்பது மேலே கூறப்பட்டது. ஓசையும் செயற் கைப்படின் மாறுதலுக்குரியதாகும்.

இம்முறையில் தமிழ் எழுத்துக்களுள் ஆய்தம் ஓசையாகவும் — மெய்கள் ஒலியாகவும் உயிர்கள் இசையாகவும் நிகழும்.

''எழுத்து'' என்னும் சொல்லமைதி: எழுத்து என்பதன் முத னிலை 'எழு' என்பதாகும். வேர்நிலை 'இழ்'. இஃது இழு–எழு, இழை என விரியும். 'இழும்' என்னும் ஒலிக்குறிப்புரிச் சொல் இதனடியாகப் பிறந்ததாகும். 'எழு' என்னும் பகுதி ஒலி வடிவைச் சுட்டி நிறையும்போது எழுவு—எழூஉ (எழுப்பு) எனவும் வரிவடிவைச் சுட்டி நிறையும்போது எழுது எனவும் நிற்கும். எழுதப்படுதலைக் கொண்டு எழுப்பப்படுதலை உணர்த்த வேண்டி எழுதுதலை உடையது என்னும் பொருளில் எழுத்து என வந்தது.

இதனை, எழுத்தெனப்படுப அகரமுதல னகர இறுவாய் (நூன்-1) நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய கூட்டி எழூஉதல் (நூன்-6) அந்தரத்தெழுதிய எழுத்தின் மான வந்தகுற்றம் வழி கெட ஒழுகலும் (கற்பியல்-5) என வரும் ஆசிரியர் கூற்றால் உய்த் துணரலாம்.

—:[(o)]:—

ஒப்புரவு

ந. இரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.,

முன்னுரை:

தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமான் இயற்றியருளிய திருக்குறள் பொருட்பாலில், சான்றாண்மை என்னும் தலைப்பில், அன்பு—நாண்—ஒப்புரவு—கண்ணோட்டம் — வாய்மை என்னும் ஐந்து பெரும் பண்புகளும், சால்புடைமை என்னும் சிறந்த பெரும் பண்பினைத் தாங்கி நிற்கும் தூண்களாக உருவகம் செய்து கூறப் பட்டுள்ளன.

''அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்து சால்பூன்றிய தூண்''

என்பது திருக்குறள். இதன்கண், அன்புடைமை—நாணுடைமை—ஒப்புரவறிதல் என்னும் அதிகாரங்களின் தலைப்புகளே, அன்பு நாண் ஒப்புரவு எனச் சுருக்கிக் குறிப்பிடப்பெற்றுள்ளன.

சால்பு என்னும் சிறந்த பண்புநலம் நிலைபெறுவதற்கு, இவ் வைந்து பண்புகளும் இன்றியமையாதனவாகத் திகழ்கின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டே, சான்றாண்மைப் பண்பு நிலைபெறுகின்றது. ஆதலின், இவ்வைந்தையும் ''சால்பு ஊன்றிய தூண்'' என்று திருவள்ளுவர் உருவகம் செய்து குறித் தருளினார். இவ்வைந்தனுள் ஈண்டு விதந்தெடுத்து ஆராய்தற் குரியதாக விளங்குகின்றது ஒப்புரவு என்னும் பண்புநலம்.

சொல்லும் பொருளும்:

''ஒவ்வொரு மொழியிலும் சிற்சில சீரிய சொற்கள், ஆழ்ந்த— நுணுகிய பல பொருட்குறிப்புகளை உடையனவாகத் திகழ்கின்றன. இன்னனைய அரிய–இனிய சொற்களைப்பற்றித் தனித்தனியே ஒவ்வொரு நூல் எழுதுதற்குக்கூட வாய்ப்பு உண்டு‡.'' அத்

''‡Some words carry so much that a whole book might be written on their meaning; and indeed many thinkers have toiled long on the definition of small words such as good, beautiful, sublime, romantic. It was well said by Cardinal Newman that the word God is itself a theology and there are hundreds of other words which are in themselves embryonic systems of thought.''

—Bernard Groom.

A Short History of English Words, P. 120.

தகைய வித்தகம் மிக்க சொற்கள் பலவற்றுள், ஒப்புரவு என்பதும் ஒன்று.

ஒரு மொழியானது எவ்வளவுக் கெவ்வளவு தொன்மை வாய்ந்து திகழ்கின்றதோ, அவ்வளவுக் கவ்வளவு அதன்கண் வழங்கும் சொற்களும், திட்ப நுட்பமான பலவகைக் கருத்துக் களைத் தம்பாற் செறித்துப் பொதிந்து கொண்டு, இனிது விளக்க வல்லனவாகத் திகழ்கின்றன. மனிதனின் அறிவும் அனுபவமும் வளரவளர, அவன் வழங்கும் சொற்களின் பொருட்குறிப்புக்களும், பல வகைகளில் வளர்ந்து வளம்பெற்று விரிவடைகின்றன. அத னாலேயே ஒரு சொல்லுக்குப் பல பொருளும், பல பொருளுக்கு ஒரு சொல்லும் அமைந்து விளங்கக் காண்கின்றோம். இன்ன சொல் இன்ன இடத்தில் இப்பொருள் குறித்துத்தான் வந்துள்ளது என்று வரையறை செய்து முடிவு காண்பது, ஒரு பெரும் கடின மான செயலாகவே உள்ளது.

ஒப்புரவு:

ஒப்புரவு என்னும் சொல்லுக்கு 'உலக நடை' என்று ஆசிரியர் பரிமேலழகர் பொருள் கூறுகின்றார். ஒப்புரவறிதல் உலக நடை யினை அறிந்து செய்தல். உலக நடை வேதநடை போல அற நூல்களில் கூறப்படுவதன்றித், தாமே அறிந்து செய்யும் தன்மைத் தாதலின், ஒப்புரவு அறிதல் என்றார்'' என்பது பரிமேலழகர் தரும் விளக்கம்.

உலக நடையறிந்து ஒழுகுதலை ''உலகத்தோடு ஒட்ட ஒழுகல், பல கற்றும் கல்லார் அறிவிலாதார்'' என்று 'ஒழுக்கம் உடைமை' என்னும் தலைப்பில் ஆசிரியர் முன்னரே அறிவுறுத்தி யுள்ளமையின், அதனையே இவ்வதிகாரத்திலும் அவர் கூறினார் என்றல் பொருந்தாமையும், அத்தகைய ஒழுகலாறு பற்றி ஈண்டு ஒரு குறளும் குறிப்பிடாமையும் கருதற்பாலன. எனவே, 'ஒப்புர வானது, யாவர்க்கும் உதவி புரிதல்' எனவே பொருள்படும். அத னாலேயே ஆசிரியர் பரிமேலழகரும், உலக நடையினை அறிந்து நடத்தல் என்னாமல், உலக நடையினை அறிந்து செய்தல் எனக் கூறுவாராயினர். 'ஈகை மறுமை நோக்கியது, ஒப்புரவு இம்மை நோக்கியது' என்பது, பரிமேலழகர் கருத்து

அறிதல்:

உதவி புரிதலையும், அவரவர் பண்பறிந்து செய்தல் வேண்டும், இல்லையேல் உதவியாகிய நன்மை புரிதலும் தீங்காய் முடியும். ''நன்றாற்றலுள்ளும் தவறுண்டு அவரவர் பண்பு அறிந்து ஆற்றாக் கடை'' என்பது திருவள்ளுவர் அறிவுரை. அதனாலேயே 'ஒப்புரவு' என்னாமல், 'ஒப்புரவு அறிதல்' என்று

தலைப்பு அமைவதாயிற்று. உதவி பெறுவோனின் தகுதி–தேவை அளவு–உதவி செய்வோனின் தகுதி–உதவி செய்வதற்குரிய முறை-அளவு—காலம்—இடம் முதலியன, அனைத்தும் அறிந்து செய்ய வேண்டுதல் பற்றி ‘ஒப்புரவு அறிதல்’ என்றார் எனினுமாம்.

வேறு சொற்கள்:

ஒப்புரவு என்னும் சொல்லின் பொருள் மிக்க ஆழமும் அருமையும் விரிவும் உடையதாகத் திகழ்கின்றது. ஆதலின் அதன் பல திறப் பொருள் நுணுக்கங்களை, நம்மனோர்க்கு உணர்த்துவதற்காக, ஆசிரியர் திருவள்ளுவர் பல வேறு சொற்களைப் பயன் படுத்துகின்றார். ஒரு பெரு நாணயத்தின் மதிப்புத் தொகையினைப் பலவேறு வகையான சில்லறை நாணயங்களாக மாற்றி அளிப்பது போல, திருவள்ளுவர் ஒப்புரவு என்னும் சொற் பொருளை வேறு பல சொற்களின் துணை கொண்டு விளக்க முற்படுகின்றார்.

1 கடப்பாடு
2 வேளாண்மை
3 ஒத்தது
4 நயன்
5 கடனறி காட்சி

என வரும் சொற்களும் சொற்றொடரும், ஒப்புரவு என்னும் உயரிய சொல்லின் பொருள் நுட்பத்தினை விளக்குவனவாகக் கையாளப் பெற்றிருக்கின்றன.

ஒரு சிறந்த வைரத்தினைப் பல வகைகளில் பட்டை தீட்டி அதன் ஒளி நலத்தை மிகுவிப்பதுபோல, ஒப்புரவு என்னும் சொல்லையே வேறு பல சொற்களைக் கொண்டு குறிப்பிட்டு, அதன் பொருள்நலத்தின் திறம் இதுவெனத் திருக்குறள் உணர்த்துகின்றது. இங்ஙனமே ஒப்புரவு புரிபவரின் இயல்பும் உயர்வும் இனையன என உணர்த்துவதற்கு,

1 ஒத்ததறிவான்
2 நயனுடையான்
3 பேரறிவாளன்
4 பெருந்தகையான்
5 கடனறி காட்சியவர்

என்னும் சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாற்

றால் ஒப்புரவு என்னும் சொற்பொருளின் விரிவும் நுணுக்கமும் பொற்புறப் புலனாகும்.

நடுநாயகம்:

சான்றாண்மைக்குரிய ஐம்பெரும் பண்புநலன்களுள், நடுநாயகமாய்த் திகழ்வது ஒப்புரவு. முதல் எழுத்து சார்பெழுத்து என்பது போல, பொருள்கள் அல்லது பண்புகளை முதல் என்றும், சார்பு என்றும் இரண்டாகப் பிரிக்கலாம். ஒப்புரவு முதன்மைப் பண்பு. ஏனைய நான்கும் சார்புப் பண்புகள். ஏனைய நான்கு பண்புகளும் சார்புத் தூண்களாக அமைய, ஒப்புரவு நடுநாயகமான உயர்ந்த தூணாக ஓங்கி விளங்குகின்றது எனலாம்.

யாவர்க்கும் உதவி புரிதல் ஆகிய ஒப்புரவானது, எத்தகைய கைம்மாறும் கருதாமல், யாவர்க்கும் உதவி பெறுதல் நமக்குரிய கடப்பாடு என்ற உணர்வுடன். இயல்பாக நிகழற்பாலது! தவிரும் தன்மையதன்றி இன்றியமையாமற் செய்தற்குரியது என்பது, கடப்பாடு என்னும் சொற்குறிப்பாற் சுட்டப் பெற்றுள்ளது.

ஒப்புரவின் உயர்வு:

மக்களாயினார் எத்துணையோ அரும்பாடு பட்டுப் பொருள் தேடுகின்றனர். அங்ஙனம் தேடுகின்ற பொருள் செயல்கள் எல்லாம், தகுதியுடையவர்களுக்கு உதவி செய்தற் பொருட்டேயாகும். தாமே நுகர்தற் பொருட்டும், தொகுத்து வைத்திருந்து இழத்தற் பொருட்டும் அன்று. ஒப்புரவு போன்ற நல்ல செயல் விண்ணுலகத்திலும் இல்லை; மண்ணுலகத்திலும் இல்லை. ''ஈவோரும் ஏற்போரும் இன்றி எல்லோரும் ஒரு தன்மையராதலின் புத்தேளுலகத்தும் யாவர்க்கும் ஒப்பது இதுபோற் பிறிதொன்று இன்மையின் இவ்வுலகத்தும் அஃது அரிதாயிற்று''. யாவர்க்கும் இயன்ற உதவிகளைச் செய்பவனே உயிரோடு கூடி வாழ்பவன் ஆவான். அங்ஙனம் ஏதும் செய்யாதவனை, அவனது உயிரின் அறிவும் செயலும் காணாமையின், உலகம் செத்தாருள் ஒருவராகவே கருதி இழித்துப் பழிக்கும்.

ஒரு சிறந்த கவிஞனின் சிறப்பினை, அவன் கையாளும் சொற்கள், சொற்றொடர்கள், கருத்துக்கள் ஆகியவற்றைப் பிற கவிஞர்கள் எங்ஙனம் ஏற்றுப் போற்றித் தழுவியுள்ளனர் என்பது கொண்டு, நாம் ஆய்ந்தறிதல் கூடும். திருவள்ளுவப் பெருந்தகை ஒப்புரவின் இயல்பினையும் உயர்வினையும் விளக்குதற்கு, முதற் குறளிலேயே மாரியினை உவமையாக மொழிந்துள்ளார். இவ் வுவமையினை விதந்தெடுத்துப் போற்றிச் சங்க காலப் பெரும் புலவராகிய கபிலர் பெருமான்,

''பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்;
பாரி ஒருவனும் அல்லன்;
மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே''

எனத் தம் பாடலில் வழி மொழிந்துள்ளார். இங்ஙனமே திருவள்ளுவர் பயன்படுத்திய வேளாண்மை என்னும் சொல்லினை வியந்து,

''வேளாளர் என்போர்கள்
வள்ளன்மையால் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரில்
தான்தோன்றி மாடமே''

எனத் திருஞானசம்பந்தர் தம் தேவாரப் பாடலில், வேளாண்மை என்பது வள்ளன்மையே என விளக்கம் செய்தருளியிருத்தலும் ஈண்டுச் சிறப்பாகக் குறிப்பிடற்பாலது.

சிறந்த உவமைகள்:

ஒப்புரவு நிகழ்தற்குரிய பாங்கும் பண்பும் விளங்க, மூன்று சிறந்த உவமைகள் இங்கே குறிப்பிடப் பெற்றுள்ளன. எல்லார்க்கும் எல்லாக் காலத்தும் வரையாது பயன்படுதற்குரியது ஒப்புரவு ஆதலின் ஊருணியும்; எல்லார்க்கும் எளிதிற் பயன்படுவது ஒப்புரவு ஆதலின் பயன்மரமும்; தான் துன்புற நேரினும் எல்லோருடைய வருத்தமும் தீர்ப்பது ஒப்புரவு ஆதலின், மருந்து மரமும் முறையே சிறந்த உவமைகளாயின.

சிறந்த நூல்கள் அறிவுறுத்தும் கருத்துக்கள், ஒரு காலத்துக்கு ஓரிடத்துக்கு மட்டுமே பொருந்துவன அல்ல. எல்லாக் காலத்துக்கும் எல்லா இடத்துக்கும் பொருத்தமாக அமையும். முன்னைப் பழம் பொருளாய்ப், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாய் விளங்கும் இறைவனைப் போலவே, சிறந்த இலக்கியங்களும் பழமைக்குப் பழமையாயும், புதுமைக்குப் புதுமையாயும் பொலிவுற்று விளங்கும். இந்நாளில் Socialism, Communism என்னும் சொற்களையும், கொள்கைகளையும் நாம் கேட்கின்றோம். இந்நாளைய பொதுமையறம் (Socialism), பொதுவுடைமை (Communism) பற்றிய கருத்துக்களையும் கூட ஒரு வகையில் திருவள்ளுவர் இவ்வதிகாரத்தில் விளக்குகின்றார் எனக் கொள்ளவும் இடமுள்ளது. சோசலிசம் அல்லது சமதர்மம் என்னும் சொற்களுக்குத் தூய — இனிய — நேரான செந்தமிழ்ச் சொல், 'ஒப்புரவு' என்பதே எனலாம். பொதுமையறம் பொதுவுடைமை ஆகியவற்றின் கொள்கைகளும், இயக்கங்களும் முதலாளியத்

தினை ஒழித்தற்குப் பெரிதும் முயன்று போராடி வருகின்றன.‡ ஆனால் பொருட்செல்வம் மிக்க முதலாளிகள், ஊருணி போலவும், பயன்மரம் போலவும், மருந்தாகித் தப்பா மரம் போலவும் வாழ முற்பட்டால், அவர்களை வெறுப்பவரோ பகைப்பவரோ அழிப்பவரோ எவரும் இலராவர்; வர்க்கப் போராட்டங்கள் ஒழியும் என்பது திருவள்ளுவர் தரும் அறிவுரை.

''ஊருணி நிறையவும், உதவும் மாடுயர்
பார்கெழு பயன்மரம் பழுத்தற் றாகவும்,
கார்மழை பொழியவும், கழனி பாய்நதி
வார்புனல் பெருகவும் மறுக்கின்றார்கள் யார்?''

—கம்பர்.

பேரறிளாளன் உலகை அவாவுவான். உலகமும் அவனை அவாவும். அவன் திரு நிறையப் பெற்றால் எவரும் வெறாமல் விரும்பியே மகிழ்வர். ஊருணி நீர் நிறைந்தால், அது நிறைய வேண்டும் என விரும்புவதன்றி நிறைதலாகாது என்று எவரும் நினையார்: அங்ஙனமே பயன்மரமும், மருந்தாகித் தப்பா மரமும் விரும்பிப் போற்றப்படும். செல்வமுடையோர் நயனுடையராகவும், பெருந்தகைமை யுடையராகவும், பேரறிவாளராகவும், யாவர்க்கும் இனியராய் — நல்லராய் — ஒப்புரவாளராய் வாழ்ந்து வர முற்பட்டால், தானும் வாழ்ந்து பிறரையும் வாழ்வித்தல் கூடும் எனத் திருக்குறள் அறிவுறுத்துகின்றது.

உலக உபகாரம்:

இத்தகைய ஒப்புரவு நெறியில் நிற்பவர்களே, பெருஞ் செல்வர்கள். நிற்கப் பெறாதவர்களே வறியவர்கள். தம் செல்வம் சுருங்கிய காலத்தும், தாம் செய்தற்குரியவற்றை அறிந்து இயற்கை யறிவுடையவர்கள், ஒப்புரவு செய்தற் நச் சிறிதும் தவற மாட்டார்கள். ஒப்புரவுச் செயலால், தம்முடைய செல்வம் முதலிய

‡''A good example of the earlier notions of Socialism eferred to by Pigou is provided by F. J. C. Hearnshaw's description of the essentials of Socialism as what may be called the Six E's: the exaltation of the community above the individual; the equalization of human conditions; the elimination of the capitalist; the expropriation of the land lord; the extinction of private enterprise; and the eradication of competition''.

—A C. Pigou,
Soeialism versus Capitalism.

வற்றிற்குக் கேடு நேரும் என்று சிலர் ஐயுற்று அஞ்சுவர். ஒப்புர வினால் ஒருபோதும் ஒரு கேடும் நேரவே நேராது. நேருமாயின், அத்தகைய அரிய நல்ல கேடு, நாம் நம்மை விலைக்கு விற்றா யினும் கொள்ளத்தக்க சிறப்புடையதாகும்.

''உண்டால் அம்ம இவ்வுலகம், இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத் தமியர் உண்டலும் இலர்; முனிவிலர்; துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப் புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்! அன்னமாட்சி யனையராகித், தமக்கென முயலா நோன்றாட் பிறர்க்கென முயலுநர் உண்மையானே'' என வரும் புறநானூற்றுப் பாடல், ஒப்புரவாளர்களின் இயல்பினை உள்ள வாறு உணர்த்துவதாகும்.

இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த பாரி பேகன் நள்ளி குமணன் முதலிய சங்க கால வள்ளல்கள், தலைசிறந்த ஒப்புரவாளர்கள் ஆவர். இங்ஙனமே இடைக்காலத்தில் வாழ்ந்திருந்த ஆழ்வார்கள் நாயன்மார்கள் ஆகிய அருளாளர்களும்கூட, ஒப்புரவு நெறி போற்றிய உத்தமர் களே யாவர். ''உலக உபகாரம் ஞானிகள் விவகாரம்'' என்பது கைவல்ய நவநீதம். ஒப்புரவு எனத் திருவள்ளுவர் பெருமான் வழங்கிய பண்டைச் செந்தமிழ் இலக்கியச் சொற்பொருளே, 'உலக உபகாரம்' என்று இந்நாளைய எளிய தமிழ் நடையில் குறிப்பிடப்பெற்றுள்ளது. Philanthropy. Altruism, Social Service, Service to the Humanity என இந்நாளில் வழங்கும் கருத்துக்களையே ஒப்புரவு என்னும் பழந்தமிழ்ச் சொல் குறிப் பிடுகின்றது எனலாம். ஆழ்வார்கள் நாயன்மார்கள் ஆகிய அரு ளாளர்களின் வாழ்க்கை, தூய—இனிய தெய்விக ஒப்புரவு வாழ்க் கையே யாகும் எனலாம்.

முடிவுரை:

தமிழகத்தின் தலைசிறந்த அருட்பெருஞ் சான்றோர் ஆகிய திருநாவுக்கரசர் பெருமான் இளமையிலேயே எத்தகைய ஒப்புர வாளராக விளங்கியிருந்தார் என்பதனைக்,

''காவளர்த்தும். குளம்தொட்டும்,
கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன
மகிழ்ந்தளித்தும், விருந்தளித்தும்,
நாவலர்க்கு வளம்பெருக
நல்கியும், நானிலத்துள்ளோர்

யாவருக்கும் தவிராத
ஈகைவினைத் துறைநின்றார்''

என வரும் பெரியபுராணச் செய்யுளில், தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமானால் விளக்கம் பெற்றிருத்தல் கொண்டு உணரலாம். இங்ஙனம் ஆழ்வார்கள் நாயன்மார்கள் அனைவருமே, தமக்கென முயலாமல் பிறர்க்கென முயன்ற பெருந்தகைமை சான்ற ஒப்புர வாளர்கள் ஆவர் என்பது, நாம் நம் கருத்தில் இருத்துதற்குரியது. அவர்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி, நாமும் இயன்றஅளவு ஒப்புரவு நெறி நின்று, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து உய்ய முயல்வோமாக.

—:[(o)]:—

முண்டா மொழி

முண்டா மொழிகளே திராவிட மொழிகளின் மிகப் பழைய அண்டை மொழிகளாகும். இம்மொழிகளை இக்கண்ணோட்டத்தில் இன்னும் ஆராயவில்லை. தமிழிலிருந்து வந்தவை என ஐயுறத் தக்க சில் சொற்கள் இவற்றில் உண்டு. 'மயூர' என்ற சமற்கிருதச் சொல் 'மரக்' என்ற முண்டா மொழிச் சொல்லிலிருந்து வந்தது என்பர். ஆனால் இச்சொல் பல திராவிடச் சொற்களுக்கு மிக நெருக்கமாக உள்ளது எனக் கருதப்படுகிறது. ஆத்திரேலிய–ஆசிய வடிவத்தில் கூட 'ரக்' என்பது விகுதியாக உள்ளது; எனவே, 'ம' என்பது இங்கு வேர் ஆகிறது. திராவிட மொழிகளில் 'மயில்' அல்லது 'மஞ்ஞை' என்பதன் வேர் 'மா' அல்லது மை என்பதாகும். இதன் பொருள் 'கருப்பு' அல்லது 'நீலம்' என்பதாகும். மயில் அல்லது மஞ்ஞை என்னும் சொற்கள் திராவிட மொழிகளிலிருந்து முண்டா மொழிக்குப் போயிருக்கலாம். 'முரள' என்ற முண்டா மொழிச் சொல்லிலிருந்து 'கேரள' என்ற சொல் திராவிட மொழிகளுக்கு வந்ததாகக் கூறுவர். 'மு' என்னும் முன்னொட்டுக்குப் பதில் 'கே' என்னும் முன்னொட்டு வந்தது என்பர். 'கேரள' திராவிட மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டதாயிருக்கக் கூடும். 'கேரள' என்னும் சொல்லில் உள்ள 'கே' என்பதற்குப் பதில் 'ம' அல்லது 'மு' என்ற முண்டா மொழி முன் ஒட்டு சேர்த்திருக்க வேண்டும்.

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்,
தமிழ் மொழி வரலாறு, பக். 222.

ஏடும் எழுத்தும்

புலவர் மு. சண்முகம் பிள்ளை

கையெழுத்தில் கவனம்:

''எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்
படித்தவன் பாட்டைக் கெடுத்தான்''

என்பது ஒரு பழமொழி. ஓர் ஏட்டின் எழுத்து வடிவும், எழுதும் முறை முதலியனவும் திருந்திய முறையில் அமையாவிடின், அவ் வேடு படிப்பவர்க்கு எளிதில் விளங்காதல்லவா? அன்றியும் தவ றாகப் படிக்கவும் நேர்ந்துவிடுமே. ஆதலால், ஒவ்வொருவரும் எழுத்தில் ஒன்றைப் பொறிக்கும்போது கையெழுத்துத் தெளிவாய் எழுதுதலோடு சொல்லமைப்பு முதலியனவும் தொடர்களில் செப்ப முற அமைப்பதில் மிகுந்த கவனம் செலுத்துதல் வேண்டும்.

கையெழுத்துத் தெளிவாக எழுதுவதற்குப் பயிலாதவனைச் சான்றோர் கடிந்துரைத்துள்ளனர்.

''வெண்பா இருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானைப்—பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
எற்றோமற் றெற்றோமற் றெற்று''

என்று ஔவை மூதாட்டியார் தம்மைத் தாக்கும் நோக்குடன் நெருங்கி வந்த ஒரு பேய்க்கு எடுத்துக் கூறினாளாம். இந்தப் பாடலில் 'வெள்ளோலை கண்பார்க்கக் கையால் எழுதாதவன் தண்டிக்கத் தக்கவன் என்பதோடு மட்டுமன்று, அவனைப் பெற்ற தாய்க்கும் பழி சேர்ப்பவனாக அவன் உள்ளான்' என்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது.

**ஏடுகளில்
எழுத்து முறை:**

ஏடுகளிலே எழுத்து முறைகளைப் பார்க்கும்போது எவ்வளவு அழகாய் முத்து முத்தாய் ஒருமைப்பாடுடைய வடிவம் பெற்றன வாய் அவை உள்ளன என்பது தெரியவரும். எழுத்தாணி கொண்டு ஓலையில் வரைந்தோர் வரிகள் கோணாமல் நேர்நேராய் அமை யும் வகையில் ஒன்றற்கொன்று சம இடைவெளி யுடையனவாய் எழுதிச் செல்லுகின்ற பாங்கு நம்மை வியக்கச் செய்யும். தொடர்ந்த் வரிகளாய்ச் சொல்லுக்குச் சொல் இடைவெளியின்றி எழுதிச் செல்

வது பெரும்பான்மையாகக் காணப்படினும் சிறுபான்மையாகச் சிற்சில ஏடுகளில் நூற்பா, அம்மானைப் பாட்டுப் போன்றவற்றைப் பத்தி பத்தியாக அமைத்தும் எழுதி வந்துள்ளனர். நூல்களை ஏட்டில் எழுதிப் போற்றிய நாளில் அதனை ஒரு பெருங்கலை யாகவே நம்மனோர் வளர்த்து வந்துள்ளனர்.

ஏடு
எழுதும் கலை:

இதழ்களை ஒழுங்குபடுத்தித் துளையிட்டுக் கயிறு சேர்த்துச் செம்மையாக்கப் பெற்ற வெள்ளேட்டில் எழுத்தாணி கொண்டு எழுதி, அந்த எழுத்துக்கள் விளங்க மை பூசி வாசித்து, அவற்றைப் பாதுகாத்து வைத்துப் பிறர்க்கும் பயன்படச் செய்தனர் முன்னையோர். இதனைச் சேனாவரையர் தாம் எழுதிய தொல்காப்பியச் சொல்லதிகார உரையில் எடுத்துக்காட்டும் ஒரு வெண்பா நமக்குத் தெரிவிக்கிறது.

''எழுதுவரிக் கோலத்தார் ஈவார்க் குரியார்
தொழுதிமைக் கண்ணனைந்த தோட்டார்—முழுதகலா
நாணிற் செறிந்தார் நலங்கிள்ளி நாடோறும்
பேணற் கமைந்தார் பெரிது''
—(தொல். சொல். 449 சேனா. உரை மேற்.)

சுவடியாய் அமைந்த புத்தகம் உயர்ந்த பொருளாகக் கொள்ளத் தக்கது என்பது உயர்திணைப் பொருள் போல வைத்து இப்பாடல் கூறுவதனால் தெரியவரும். நலங்கிள்ளி என்பவன் ஏடுகளைப் போற்றினான் என்றும் இப்பாட்டில் குறிக்கப்பட்டுள்ளது. 'கிள்ளி' எனவரும் குறிப்பினால் இவன் சோழ மன்னன் ஆதல் வேண்டும் என்று கொள்ளலாம். இலக்கியச் செல்வங்களாய் அமைந்த ஏடுகளை அந்நாளில் மன்னர் முதலியோர் போற்றிக் கல்வியை வளர்த்தனர் என்பது பெருமைப்படத்தக்க செய்தியாகும்.

கல்வி கற்ற மக்களும் தாங்கள் கற்ற ஏடுகளைப் போற்றிக் காக்க வேண்டும் என்னும் குறிப்பைப்

''பாட மேறினும் ஏடது கைவிடேல்''

என்னும் முதுமொழியால் உணரலாகும். இவ்வாறாக மன்னரும் மக்களும் போற்றிய ஏடுகளே வழிவழியாய் வந்து தமிழுலகிற்குப் பயன் தந்துள்ளன.

ஏட்டின்
எழுத்து வடிவம்:

பண்டைய ஏட்டுச் சுவடிகளில் எழுத்து, வரிகள் முதலியன

ஒரே அளவான அமைப்பில் அழகுறக் காணப்பட்டாலும் அவற்றை வாசிப்பதற்குத் தனிப்பழக்கம் வேண்டும். முக்கியமாக ஏடுகளில் புள்ளி பெறும் மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிடப்படுவதில்லை என்பது கவனிக்கத்தக்கது. ஓர் எழுத்து மெய்யா, உயிர்மெய்யா என்பது எளிதில் உணரக் கூடியதாயிராது. கொம்பு பெறும் எழுத்துக்களில் குறில் நெடில் வேற்றுமை இன்றி ஒரு சீராகவே காணப்படும். காலாக எழுதப்படும் 'ா'வுக்கும் 'ர' என்னும் இடையெழுத்திற்கும் வேறுபாடு தெரியமாட்டா. எல்லாம் கால் போலவேதான் தோற்றமளிக்கும். 'ஐ'காரத்தைக் குறிக்க இடப்படும் 'ை' என்னும் இரட்டைச் சுழிக்கும் இரண்டு சுழி 'ன'கரத்திற்கும் வேற்றுமை காண்பதும் அரிது. இவ்வாறே ல, வ,—க,ச வடிவ வேற்றுமைகளும் கூர்ந்து காணத் தக்கனவாயிருக்கும், கு, டு, ரு,—து, நு, லு, று, னு போன்ற மிக நுணுகிய வடிவ வேறுபாடுடைய எழுத்துக்களும் உருவ ஒற்றுமையால் திகைக்க வைக்கும். 'பச்சை நரம்போடி' என்னும் ஒரு தொடரை ஒருவர் பச்சை நாமப்பொடி' என வாசித்தார் எனில் ஏட்டு எழுத்துக்கள் எவ்வளவு நுண்மையாகப் பார்க்கப்பட வேண்டும் என்பது விளங்கும்.

கையெழுத்தில் ஒருமைப்பாடின்மை:

ஏடுகளில் காணப்படும் கையெழுத்துக்களிலும் ஒருவர் கையெழுத்துப்போல மற்றொருவர் கையெழுத்து இருப்பதில்லை. எந்தெந்த எழுத்தை ஏடெழுதியோர் எத்தகைய வடிவத்தில் அமைத்துச் செல்கிறார் என்பதும் சுவடி முழுமையாய்ப் பார்த்துத் தீர்மானிக்கப்பட வேண்டியதாயிருக்கும். ஆதலால், ஏட்டில் எழுதிய எழுத்துக்களை வாசிப்பதற்குத் தனித் திறனும் பயிற்சியும் அவசியமாகும்.

ஏடு வாசிப்பது எளிதன்று:

ஏடுகளில் நேரும் தடுமாற்றங்களை அவற்றில் பயின்றோர் தாம் அனுபவத்தால் அறிய இயலும். ''ஆனைக்கும் அடி சறுக்கும்' என்னும் உலக வசனம் ஏடு வாசிப்பதில் நூற்றுக்கு நூறு உண்மை. ஏடுகளைப் பரிசோதித்து அச்சிடுவதில் தலைசிறந்தவராய் முன்பு விளங்கியவர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களாவர். இவர்கள் வெளியிட்ட முற்பதிப்புகளையும் பிற்பதிப்புகளையும் பார்ப்போர் பாடங்களில் அவர்தம் அனுபவத்தால் செய்துள்ள மாற்றங்களைக் காணலாம். முதற்பதிப்பில் தாம் தவறாக வாசித்தவற்றைப் பின் செய்துவந்த நூற் பரிசோதனை

யாலும் ஆராய்ச்சியாலும் கண்டு அவர் திருத்தி அமைத்த இடங்கள் பலவாகும்.

டாக்டர் உ. வே. சா. அனுபவம்:

டாக்டர் ஐயர் அவர்களின் பின்வரும் அனுபவ உரைகள் மேலதற்குச் சான்று பகரும். சிந்தாமணியை அவர்கள் ஆராய்ந்த போது, 'மயக்கந் தந்த விஷயங்கள்' என்று சிலவற்றை அவருடைய என் சரித்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். இப்பகுதி ஏட்டு எழுத்துக்களை நிதானித்துப் படிப்பதில் அவர் பட்ட சிரமங்களை எடுத்துக் காட்டுவதாகும். அப்பகுதி வருமாறு:

> சிந்தாமணிப் பிரதிகள் இருபத்துமூன்று கிடைத்தன. அவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு பார்க்கலானேன். பார்க்கப் பார்க்கப் பல விஷயங்கள் தெளிவாயின. ஆனால், பாடபேதக் கடலுக்குக் கரை காணவே முடியவில்லை. மனம்போன போக்கிலே எழுதிய கனவான்களால் விளைந்த விபரீதம் எவ்வளவோ ஏட்டில் உண்டு.
>
> ''இது கொம்பு, இது சுழி என்று வேறு பிரித்து அறிய முடியாது. மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியேயிராது. ரகரத்துக்கும் காலுக்கும் வேற்றுமை தெரியாது. சரபம் சாபமாகத் தோற்றும்; சாபம் சரபமாகத் தோற்றும். ஓரிடத்தில் சரடு என்று வந்திருக்கிற வார்த்தையை நான் சாடு என்றே பல காலம் எண்ணியிருந்தேன். தரனென்பதைத் தான் என்று நினைத்தேன் ... ... இப்படியே குருதி என்பதைக் குந்தியென்றெண்ணித் தடுமாறினேன்.''
>
> —(என் சரித்திரம், பக். 767, 768)

பொருள் காண எடுத்த பெருமுயற்சி:

இப்படியாக ஐயரவர்கள் எழுத்துமுறையால் சொல்வடிவம் காணத் தடுமாறியது ஒருபுறமாக, பொருள் விளக்கம் பெறுவதற்கும் அவர்கள் பட்ட பாடுகள் கொஞ்சநஞ்சமல்ல. சிந்தாமணி உரையில் கண்ட 'பஞ்சாட்சர மந்திரம்' என்பதன் பொருள் விளக்கம் பெறுவதற்கு அவர் பெரும்பாடுபட்டார். சிந்தாமணி உரையில் கண்ட 'பஞ்சாட்சர மந்திரம்' என்பதன் பொருள் விளக்கம் பெற்ற வரலாற்றைப் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

''ஓரிடத்திலே, 'திருத்தங்கு மார்பன் புனலாட்டிலே உயிர் போகின்ற ஏமலிக்குத் தானும் வருந்திப் பஞ்சாட்சரமாகிய மந்திரத்தைக் கொடுத்தபடியும்' என்று இருந்தது. 'இது ஜைன நூலாயிற்றே, பஞ்சாட்சர மந்திரம் இங்கே எப்படிப் புகுந்து கொண்டது' என்ற சந்தேகம் வந்தது. மூலத்தில், ஏமலிக் கமிர்தீந்தவாறும்' என்று இருக்கிறது. 'அமிர்து' என்பதற்குப் பஞ்சாட்சர மந்திரம்' என்பது உரையாக இருந்தது. 'மந்திரத்தை என்றிருக்க வேண்டும். யாரோ பிரதியைப் பார்த்து எழுதின சைவர் பஞ்சாட்சரம் என்று சேர்த்தெழுதி விட்டார் என்று முதலில் கருதினேன். பின்னாலே வாசித்து வருகையில் 'ஐம்பத வமிர்த முண்டால்' (946) என்று வந்தது. வேறிடங்களில் உள்ள உரையால் பஞ்ச நமஸ்கார மந்திரமென்று தெரிய வந்தது. ஜைன நண்பர்களை விசாரித்தேன். அவர்கள் மிகவும் எளிதில், 'அருகர், வித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், ஸாதுக்கள் என்னும் பஞ்ச பரமேஷ்டிகளை வணங்குதற்குரிய ஐந்து மந்திரங்களைப் பஞ்சநமஸ்காரம் என்று சொல்வது ஸம்பிரதாயம்' என்று தெளிவுறுத்தினார்கள்.

—(என் சரித்திரம், பக். 769)

ஐயரவர்களின்
பதிப்பு அனுபவம்:

இப்படியெல்லாம் ஏட்டெழுத்துக்களோடும் விளங்காத மரபுத் தொடர் முதலியவற்றோடும் டாக்டர் ஐயர் அவர்கள் போராடித் தம் பதிப்புகளைச் சீர்செய்து வந்தபோதிலும், ஒரு பதிப்பிலேயே பிழைகளை எல்லாம் முற்ற முடியக் களைய இயலவில்லை; பின்னால் நிகழ்ந்த ஆராய்ச்சிகளினால் திருத்தம் கண்டு பிற்பதிப்புக்களில் அவற்றைத் திருத்தியுமுள்ளார்கள்.

''நூற்பதிப்பு விஷயத்தில் வரவரப் பாடங்கள் திருந்துவதும், உண்மைப் பொருள் தெளிவாவதும் புதிய செய்திகள் புலப்படுவதும் புதியனவல்ல. எடுத்த எடுப்பிலே முற்றத் திருந்திய பதிப்பை வெளியிடுவதென்பது இயலாத காரியம். என் முதற்பதிப்புக்களில் அமைந்திருந்த பல பிழைகளைப் பிற்காலத்தில் நானே திருத்திப் பதிப்பித்திருக்கிறேன். புதிய புதிய ஆராய்ச்சி செய்யும்போது கிடைக்கும் அறிவால் பல காலமாகத் திருந்தாத செய்திகள் திருந்தியதுமுண்டு.

''அறிதோ றறியாமை கண்டற்றால்'
என்று திருவள்ளுவர் கூறியது பொய்யாகுமா?

—(என் சரித்திரம், பக். 895)

ஏடுகளோடு பல்லாண்டுகள் பழகிய டாக்டர் ஐயர் அவர்களின் அனுபவம் இத்தகையதாயின் ஏனையர் நிலையைக் குறித்து எந்த அளவு கணிக்க இயலும்.

பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை கருத்து:

டாக்டர் ஐயர் அவர்களைப் போலவே ஏடுகளை நன்கு பரிசோதித்து நூல்களைப் பதிப்பிப்பதில் வல்லவராய் விளங்கிய பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களின் அனுபவங்களை அடுத்துக் காண்போம்.

> ''ஏடு வாசிப்பதில் தவறாகப் பாடல்களைக் கொள்ளுதலும் உண்டு. 'பொன்' என்பதும் பேரன் என்பதும் ஒன்றுபோலவே ஏடுகளில் காணப்படும்; இடம் நோக்கி, செய்யுளில் ஓசை நோக்கி, பொருள் நோக்கி இன்னது பாடம் என்று திட்டப்படுத்துதல் வேண்டும். மிகச் சிறந்த பண்டிதர்கள் கூட இதில் பிழைபோதற்கு இடமுண்டு. நண்டிற்குக் 'களவன்' என்ற ஒரு பெயருண்டு. இதற்கு வயற்களத்திலே வாழும் உயிர் என்பது பொருள். இதனைக் 'கள்வன்' என்று நெடுங்காலமாகப் படித்து, அச்சியற்றி வெளியிட்டவர்களும் மிகச் சிறந்த வித்துவான்களாவர். கம்ப ராமாயணத்திலேயே கையடைப் படலத்தில்,
>
> ''உயிரிரக்குங் கொடுங் கூற்றின்
> உளையச் சொன்னான்''
>
> என்பது பலர்க்கும் ஞாபகமிருக்கலாம். இதனைச் சுன்னாகம் குமாரசுவாமிப் பிள்ளை, உயிரீர்க்குங் கொடுங் கூற்றின்' என்று பதிப்பித்தனர். 'இரக்கும்' என்பதிலுள்ள சுவை இப்பாடத்தில் இல்லாமை காணலாம்''

இவ்வாறாகக் 'கம்பன் ஆராய்ச்சிப் பதிப்புப் பற்றிய தமது ஆய்வுரையில் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் ஏடு வாசிப்பதில் ஏற்படும் தடுமாற்றங்களை எடுத்துக் கூறியுள்ளார்.

பிரதிகளில் பிழை பற்றிப் பேராசிரியர் அ. சீநிவாச ராகவன்:

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டில் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு கம்ப ராமாயணத்திற்கு ஆராய்ச்சிப் பதிப்பு ஒன்றை வெளியிடக் காரைக்குடிக் கம்பன் கழகம் முயன்றது. அப்பொழுது

அப்பதிப்பு முயற்சியையும் அருமையையும் தமிழுலகிற்கு அறிவிக்கும் வகையில் பேராசிரியர் அ. சீநிவாச ராகவன் அவர்கள் 'ஏடும் எழுத்தாணியும்' என்னும் தலைப்பில் அவற்றைப் பேச வைத்துக் கம்ப ராமாயண ஏடுகளின் நிலைமையை அறிவித்தார். (தினமணி கதிர், பக். 46-48, 28—5—1950). அவர் காட்டிய ஏடும் எழுத்தும் பற்றி வரும் பகுதியை மட்டும் இங்குக் காண்போம்.

எழுத்தாணி ஏட்டுச் சுவடியைப் பார்த்துப் பேசுகிறது:

''உன் உடம்பிலே கம்ப ராமாயணத்தைத் தாங்கியிருப்பதாக நீ பெருமைப்படுகிறாய். ஆனால், உன் தந்தையின் பிரதிதானே நீ. உன்னைப் பிரதி செய்த மகானுபாவன் கையில் நானுந்தான் இருந்தேன். ஆனால், பழைய பிரதியை அப்படியே பிழை ஒன்றும் இல்லாமல் அவன் எடுத்து எழுதினானா? அதுதான் இல்லை. ஏன் எழுதவில்லை தெரியுமா? அவசரம் ஒரு காரணம். அவசரத்தில் 'ல', 'வ' ஆகிவிடும். 'ை' என்ற கொம்பு 'ன' ஆகிவிடும். இதனால், 'தலம்' 'தவ'மாகி மாறும். 'கை' 'னக' என்ற வடிவம் பெறும். இதனால் பொருள் எவ்வளவு மாறி விடுகிறது. கவனித்தாயா? மெய்யெழுத்துக்களுக்கு மேலே புள்ளி வைக்க முன்னமேயே நான் மறுத்து விட்டேன். புள்ளி வைத்தால் உன் உடம்பில் துளை விழுந்துவிடும் என்பது எனக்குத் தெரியாதா? அதை நான் செய்வேனா? இப்போது பார். 'கை' என்பதை 'னக' என்று எழுதிவிட்டால் 'சேக்கை' என்ற சொல் உன் உடம்பில் எப்படித் தோற்றம் அளிக்கும், சொல்''.

'செகனக்' என்றிருக்கும் என்றது ஓலை.

''இதைப் படிப்பவர்கள், சேகனக' என்றோ, 'செகம் நக என்றோ படித்துக் கொள்ளலாம் அல்லவா? 'ெ' என்ற கொம்பையே நெடிலுக்கும் குறிலுக்கும் உபயோகிப்பதுதானே நமது மரபு?''

என்று கேட்டது எழுத்தாணி.

''இருந்துவிட்டுப் போகட்டுமே. இதனால் என்ன?'' என்றது பனை ஓலை.

''இதனால் என்னவா? 'தவலை போச்சு' என்றதைத் 'தலை போச்சு' என்று படித்தவன் கதையாக அல்லவா முடியும். இப்படித் தனித்தனியாக எத்தனை

பிழைகள் உள்ளே புகுந்து விட்டனவோ? யார் கண்டது? கம்பர் பாடியது ஒன்று; நாம் கம்பர் எழுதியது இது என்று நினைப்பது வேறொன்று. இப்படியாக இருந்தால் நீயும் நானும் சேர்ந்து பழைய இலக்கியங்களை ஏதோ பாதுகாத்து விட்டதாக எப்படிச் சொல்லிக் கொள்ள முடியும்? பாதுகாக்கும் முயற்சியில் ஏற்பட்ட குறையே பாதுகாக்க வேண்டிய பொருளைச் சிதைத்துவிட்டதே?

''இதோடு கண்ணால் பார்த்துப் பிரதி செய்யாமல் காதினால் கேட்டு எழுதுவதால் பல பிழைகள் தோன்றி விட்டன. 'கழை' 'களை'யாகவும், 'மணம்' 'மன'மாகவும், 'பாவகை' 'பாடுகை'யாகவும் திரிந்து விடலாம் அல்லவா? இப்படிக் கம்பர் காலத்திலிருந்து எத்தனை பிழைகளோ?''

'எழுத்தாணி பெருமூச்செறிந்து பேசி அலுத்துவிட்டது போல் நின்றது''.

இந்தக் கற்பனை உரையாடல் வழி ஏடுகளில் எப்படி எப்படி எழுத்துக்களும் சொற்களும் மாறுபாட்டுக்கு இடமாகி வந்து கொண்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகத் தெரிய வருகிறதல்லவா?

ஏட்டுக்
குறிப்புகளும் ஆய்வுக்குரியன:

ஏடு எழுதுவோர் எழுதும் குறிப்புக்களையும் நன்கு ஆராய்ந்து தெளிந்தே உண்மை காணவேண்டிய இடங்களும் பலவாக இருக்கும். அண்மையில் எனக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றை இங்கே குறிக்க விரும்புகிறேன்.

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி யவர்கள் தம்முடைய சொந்த ஊராகிய வெள்ளலூரில் தம் இல்லத்திலிருந்த ஏட்டுச் சுவடிகள் சிலவற்றைச் சில மாதங்களுக்கு முன் கொண்டுவந்து தந்தார்கள். அவற்றுள் ஓர் ஏடு பாட்டியல்கள் சில கொண்டதாகக் காணப்பட்டது. முதலில் குறிக்கப்பட்டிருந்தது 'வருணப்பாட்டியல்' என்பது. வருணப் பாட்டியல் அகத்தியர் செய்ததாகத் தெரிய வந்த ஒன்றாகும். ஆனால், நூல் கிட்டவில்லை. இந்த ஏட்டில் 'வருணப் பாட்டியல்' என்னும் பெயரைக்கண்டவுடன் இதுவரை அச்சாகாத பாட்டியல் நூல் கிடைத்துவிட்டது என்று மகிழ்ந்தேன்.

நூலின் முதலில் உள்ள காப்புச் செய்யுளை வாசித்தநுமே அது பல ஆண்டுகளுக்கு முன் (1943) என்னால் உரை எழுதப்பட்டதும் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களால் பதிப்பிக்கப் பட்டதுமான 'நவநீதப் பாட்டியல்' என்பது விளக்கமாயிற்று. மேலும், இப்பாட்டியலுக்கு இரண்டு பழைய உரைகள் உள்ளன என்பதும் புத்துரையுடன் நூலை அச்சிட்டு முடித்த தருவாயில் கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றுள் ஓர் உரையினைக் கொண்டுள்ள நவநீதப் பாட்டியல் உரை ஏடு என்பது மேற்கொண்டு செய்த பரிசோதனையால் விளக்கமாயிற்று. ஆகவே, ஒரு நூலின் உண்மைப் பொருளை அறியப் பலவேறு வகையில் பரிசோதனை நிகழ்த்துதல் வேண்டும் என்பது புலனாகும்.

தவறான வாசிப்பின் விளைவு:

சில நூற் பெயர்களைத் தவறாக வாசித்துக் கொண்டு திரித்து வழங்குதலும் காணப்படுகிறது. இதுவரை அச்சாகாத நிகண்டு நூல்களுள் ஒன்று 'அகராதி மோனைக் ககராதி எதுகை' என்பது. இப்பிரதி பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் தேடித் தொகுத்த சுவடிகளுள் ஒன்றாகும். அவர்கள் இந்நூலைக் குறித்துத் தமிழ்ப் பேரகராதியின் (Tamil Lexicon) முகவுரையில் தெளிவாக எழுதியுள்ளார். (பக். XXXV) தம்முடைய 'இலக்கியச் சிந்தனைகள்' என்ற நூலிலும் இந்நூலைக் குறித்துள்ளார் (பக். 132). இந்நூலின் பெயரை 'அகராதிக் கலை' எனும் நூல் ஆக்கிய சுந்தர சண்முகனார் 'அகராதி மோனைக்கு அகராதி எதுகை' என்று குறிப்பிட்டுள்ளார் (பக். 372). மோனை அகரம் ஆதியாக வரும்; எதுகையில் வரும்போது ககரம் முதலிய பதினெட்டு மெய்கள்தான் இடம் பெறும். இதனைச் சூடாமணி நிகண்டின் பதினொராம் தொகுதி நோக்கியும் காணலாம். அதில் ககரம் முதல் னகரம் ஈறாக எதுகைமுறை அமைப்பில் சொற்பொருள் விளக்கப்பட்டிருத்தல் காணலாம். ஆகவே, அகராதி மோனைக்கு அகராதி எதுகை என்று கூறுதல் சரியன்று; இது பேராசிரியர் அவர்கள் எழுதியவற்றை ஊன்றி உணராமையால் நேர்ந்த தவறாகும். இவர் கொடுத்த தவறான வடிவிலேயே இந்நூற்பெயரை 'டாக்டர்' பட்ட ஆய்வு எழுதிய சிலரும் குறிப்பிட்டுள்ளமை வியப்புக்குரியதாம். ஆய்வேட்டாளர் நூற் பெயரின் பொருள் நிலையை ஊன்றி உணராமலும், முதலில் இதுபற்றி அறிமுகப்படுத்தியவர்கள் எவ்வாறு கொண்டனர் என்பதை ஆராயாமையாலும் நேர்ந்த தவறாகும் இது. இப்படிச் சில தவறுகள் உண்மை போலத் தோற்றமெடுத்து விடுகின்றன.

சுவடி ஆய்வு
வளர வேண்டும்:

இவ்வாறாக ஏடும் எழுத்தும் விளைத்து வரும் விநோதங்கள் பலவாகும். இவையெல்லாம் பண்டை நூற்சுவடிகளைப் போற்றி ஆராய்ந்து உண்மை காண்பதனால் தெளிவு பெற இயலும். அச்சு எழுத்தில் நூல்கள் வருகின்ற இக்காலத்தில் ஏடும் எழுத்தும் ஒரு சிலராலாவது போற்றப்படுதல் வேண்டும். அப்பொழுதுதான் நம் பண்டைக் கருவூலங்கள் உலகிற்குப் பயன்பட வாய்ப்பாகும்.

—[நிறைவு]—

கருத்துக் கருவூலம்

நூல் பல கற்றா னேனும்
பொருள்நுனித் தறியான் என்னில்
மாலோடு வாளா கத்தும்
மால் நிறக் காகம் போல்வான். —அதிவீரராம பாண்டியன்

மொழி திரிந்து வேறுபடுவதெல்லாம் தன்னியல்பாகவேயாம். ஒருவனாலுந் தான் விரும்பியபடி, தான் பேசும் மொழியை மாற்ற முடியாது. மக்களறிவின்றியே மொழி முதிர்ந்துகொண்டு செல்லும். எனவே தமிழ் மொழியின் ஒழுகலாற்றை மாற்றுதல் எவராலும் முடியாததாம். —பரிதிமாற் கலைஞர்

மக்கள் வளர்ச்சிக்கேற்ப அறிவியலும் வளர்ந்துகொண்டே போகிறது. இன்றைய தமிழ்க்கலையில் அறிவியற்கலை நிறைய வேண்டும். —திரு. வி. க.

எல்லாவற்றிலும் முற்படவே, அறிவியல் உணர்ச்சி நமக்கு வேண்டியதாயுள்ளது. நமது தமிழ் மக்களுக்கு அறிவியல் நோக்கு ஏற்படத் தமிழ் உதவுதல் வேண்டும். அறிவுத்துறைகள் வளர்ச்சியில் நாமும் முயன்று பங்கு கொள்ளுதல் வேண்டும். இலக்கிய வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்குங்கூட இவற்றின் துணை வேண்டிய தாகும். —எஸ். வையாபுரிப்பிள்ளை

நல்ல நோக்கம் அல்லது நல்ல பயன் என்றே பொருள்தரக் கூடிய 'இலக்கியம்' என்ற சொல்லைத் தமிழர்கள் எழுத்தாலாக்கப் பட்ட எல்லா நூல்களுக்கும் பொதுப்பெயராக வழங்கி வருவதைக் கவனித்தால் தமிழுக்குள்ள ஒரு தனிச்சிறப்பைக் காணலாம்.
—நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

ஆடித் திங்கள்

—: வெண்பாப் பரிசுப் போட்டி முடிவு :—

முதற் பரிசு பெற்ற வெண்பா:

01. கழியால் வழிகாணும் கண்ணற்றார் துன்பம்
ஒழியும் வழிகாண ஓர்ந்து—விழிவழங்கி
மண்மீது காட்சிநலம் மாண்புறவே செய்வதுதான்
கண்பெற்றார்க் குற்ற கடன்.

—சிவகிருட்டிணன்,
ஆசிரியர், வே. கி. உ. பள்ளி,
கணியூர்-638203.

02. சாதியால் சண்டாளர் தூண்டும் சமயத்தால்
வீதியில் வீழ்கின்ற மாந்தர்காள்—நீதியும்
மண்மீதில் அன்புந்தாம் ஆண்டவன் என்றுணர்தல்
கண்பெற்றார்க் குற்ற கடன்.

—மோ. அந்தோணிராசு,
இல. இள., நிறைநிலை யாண்டு,
கரந்தைப் புலவர் கல்லூரி,
தஞ்சை-2.

03. மூடப்பழக் கத்தை முற்றும் புறங்காட்டி
ஓடச்செய் தானே ஒருமறவன்!—ஈடில்லாத்
தொண்டன் ஈ. வே.ராவைப் பின்பற்றல் நல்லறிவாம்
கண்பெற்றார்க் குற்ற கடன்.

—ப. திருநாவுக்கரசு,
32.பெ. மாரியம்மன் கோவில் தெரு,
மேலக்காவேரி,
குடந்தை-612002.

04. முத்தமிழ்க்குக் காவலனை முத்திதரும் வேலவனை
நத்திவரும் அன்பர்க்கு நல்லருளாம்—புத்தமுதை
மண்மீதில் ஈபவனை நாளெல்லாம் காண்பதுவே
கண்பெற்றார்க் குற்ற கடன்.

—பாவலர் கதிரவன்,
59. ஜெ. பி. கீழத்தெரு,
கும்பகோணம்.

05. மக்களுக்கு வாழ்வு வளஞ்சிறக்க; மாய்த்திடும்
சிக்கலறச் சிந்தை தெளியவே—பக்கமாய்
வண்ணமுற நின்று வழிதுலக்கல் நல்லறிவுக்
கண்பெற்றார்க் குற்ற கடன்.

—அரங்க அறமன்னன்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
உறந்தைராயன் குடிகாடு. தஞ்சை மாவட்டம்.

06. விண்முற்றாய்ப் பூத்து விரிகின்ற செஞ்சுடராய்ப்
பண்பட்டார் உள்ளம் படிகின்ற சால்பூறப்
புண்பட்டார் வாழ்வு பொலிய அருள்மலர்தல்
கண்பெற்றார்க் குற்ற கடன்.

—புலவர் எ அ. சு இராமமூர்த்தி, பி. லிட்.,
முதனிலைத் தமிழாசிரியர், அரசுயர் பள்ளி,
அம்மைநாயக்கனூர்-624201,
நிலக்கோட்டை வட்டம், மதுரை மாவட்டம்.

07. சாதி வெறிபிடித்துச் செத்தொழியும் மாந்தருக்கு
நீதி வழிகாட்டி நின்றிடுவோம்—பேதமின்றி
மண்ணில்வாழ் மக்களினை மக்களாய் வாழ்வித்தல்
கண்பெற்றார்க் குற்ற கடன்.

—எசு. ஆர். இராசா, (M. A ,) B. L., I. SC.,
(கவிஞர்-சேதரசு, இராமநாதபுரம் இராசா)
124. சம்மந்தபுரம் தெற்கு அக்கிரகாரம்,
இராச பாளையம்-626117.

08. சின்னஞ் சிறுவயதுச் செந்தமிழ்ச் சேய்களுக்கு
வெண்மொழியாம் ஆங்கிலத்தை வேண்டிப் புகட்டாமல்
தென்மொழியாம் நம்மொழியைத் தேனாய்ப் புகட்டுவதே
கண்பெற்றார்க் குற்ற கடன்.

- அ. இருளப்பன், (பி. ஏ. டி. பி. டி,)
பாண்டியன் போக்குவரத்துக் கழகம்,
பெரியாறு மின்திட்டம்-626525, மதுரை மாவட்டம்.

09. ஊன்பெற் றுயிர்பெற் றுருவொடு தோன்றியும்
ஏன்பெற்றேம் என்றிரங்கும் ஏழையர்—தோன்றியக்கால்
உண்ணென் றுயிரூட்டிப் பொன்முகங் காண்பதுவே
கண்பெற்றார்க் குற்ற கடன்.

—புலவர் பன்னீர் செல்வம், க. மு., கல். இ.
125. மயில் பாளையம், பட்டுக்கோட்டை-614602.

10. வெறியாக நம்மீது வேண்டுமென்றே சின்மொழியைக்
குறியாக வேதிணிப்பார் கோளை—நெறிநின்று
திண்ணமுடன் தீர்ப்பதே த்ந்தமிழ் சேரறிவுக்
கண்பெற்றார்க் குற்ற கடன்.

— புலவர் வீ. இராமமூர்த்தி, பி. லிட்.,
தமிழாசிரியர்,
முத்தையா அழகப்பா மேனிலைப் பள்ளி,
கோட்டையூர், முகவை மாவட்டம்-623106.

11. பசியென்று வீட்டுப் படியேறி வந்தார்
பசிபோக்க அன்னம் படைத்துப்—புசிக்குமதைக்
கண்ணாரக் கண்டு கனிந்துருகும் காட்சியொன்றே
கண்பெற்றார்க் குற்ற கடன்.

—பொற்கைப் பாண்டியன்,
361-எ. சக்திவேல் இல்லம்,
சீவா நகர் முதல் தெரு, மதுரை-625011.

12. விடிந்த பொழுதெல்லாம் வாழ்கின்றோம்; ஓய்ந்து
மடிந்தபினும் கண்ணிரண்டு மட்டும்—மடிவதில்லை
கண்ணிழந்த ஏழையர்க்குக் கண்தானம் செய்வதுவே
கண்பெற்றார்க் குற்ற கடன்.

—கோம்பைக் குயில்,
4.6. காணிக்காரர் இல்லம்,
கோம்பை-626522, மதுரை மாவட்டம்.

13. உருவில் மனிதர் உணர்வில் விலங்காய்த்
தெருவில் வறிதே திரிவோர்—திருமுகத்தின்
புண்ணிரண்டைக் கண்ணிரண்டாய் மாற்றுதலே போற்று [கல்விக்
கண்பெற்றார்க் குற்ற கடன்.

புலவர் ச. சீத்தாராம் (சீரான்),
திருவள்ளுவர் இல்லம், கோம்பை (அஞ்சல்),
மதுரை மாவட்டம்.

14. இல்லார் மனத்தில் இறைவனைக் காண்பதுவும்
பல்நூற் கலைகள் பயில்வதுவும்—எல்லோரும்
மண்ணில் சமமாய் மகிழ்வுறச் செய்வதுவும்
கண்பெற்றார்க் குற்ற கடன்.

—நா. தட்சிணாமூர்த்தி (தென்னிலவன்),
இளங்கலை இறுதி ஆண்டு,
38. ஏ. பாலுத்தெரு, கும்பகோணம்-612001.

15. விண்ணகத்து தேவரெலாம் வாழ்த்துரைத்துப் போற்றிடவே
மண்ணகத்து மாந்தரெலாம் மாண்புறவே—கண்ணொளி
பண்புறவே கண்ணற்ற அன்பர்க்குத் தந்தருளல் [யைப்
கண்பெற்றார்க் குற்ற கடன்.

புலவர் எ. சௌதாமினி,
எம். ஏ,. பி. எட்.,
மேல்நிலைத் தமிழாசிரியர்,
89. என். என். பேட்டை வீதி,
தாராபுரம்-638656, பெரியார் மா-ம்.

16. தடம்புரளும் நல்ல தமிழ்மரபும் மண்டும்
மடமைக் கதைகளும் மாய்த்து—அடலேறே!
மண்ணில் சமுதாயம் மாண்புறச் செய்வதுவே
கண்பெற்றார்க் குற்ற கடன்.

—சி. துரைமாணிக்கம்,
தமிழாசிரியர்,
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
வடகாடு-622304, புதுக்கோட்டை மா-ம்.

17. விண்ணை யளக்கவும் வேல்விழி வீச்சினால்
மண்ணை யடக்கவும் மாதேகேள்—புண்ணேனும்
கண்ணிரண்டும் வேண்டுமே கண்ணிலார்க் கஃதீதல்
கண்பெற்றார்க் குற்ற கடன்.

—புலவர் அ வைத்திலிங்கம்,
கருவூர்-622204.

18. அன்னைத் தமிழை அரியா சனத்திருத்தி
மன்னும் சிறப்பு மலரவும்—துன்பங்கள்
மண்பட்டு மாளவும் செய்வதே கல்வியெனும்
கண்பெற்றார்க் குற்ற கடன்.

—புலவர் வெ. போத்தன்,
மேட்டுப்பட்டி (சேத்தூர் அஞ்சல்),
இராசபாளையம் வழி.

19. தீமையைக் கண்டஞ்சல் தீயோரைக் கூசுதல்
காமத்துக் காட்சிக்குக் கண்புதைத்தல்—பூமியிலே
உண்மை மனத்துடனே ஊனமுற்றோ ரைத்தாங்கல்
கண்பெற்றார்க் குற்ற கடன்.

—பாவலர் இடிமுரசு,
'அறிவுப் பண்ணை', சென்னை-600014.

20. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதார் என்பரே—மண்ணுலகில்
புண்பெற்றார் கல்லாத புன்மையினைப் போக்குதலே
கண்பெற்றார்க் குற்ற கடன்

— புலவர் நா. மரகதம்.
தமிழாசிரியர்,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி.
பெருந்துறை-638052.

21. சாதி சமயம் மொழியென்றே வேறுபடா
நீதி நலமே வழங்கிடுமே—இந்தியாவின்
எண்ணமெலாம் ஒன்றியே இல்லாமை நீக்குதல்
கண்பெற்றார்க் குற்ற கடன்.

புலவர் தெ. ம. சடையப்பன், (எம். ஏ)
ஆசிரியர்,
இராசாக் கோட்டை எண். 1. பள்ளி,
தருமராசா தெரு,
இராசபாளையம்.

முதற் பரிசு பெற்ற அன்பர்க்கு துந்துபி ஆண்டு தமிழ்ப்பொழில் மலர்கள் அனுப்பி வைக்கப் பெறும்.

புரட்டாசித் திங்களுக்குரிய

....: வெண்பாப் போட்டி :—

ஈற்றடி:

"எழுபகையை வெல்ல எழு"

வெண்பாக்கள் வந்து சேரவேண்டிய

இறுதிநாள்: 15—9—1982

குறிப்பு: வினாக்கள் தம் தகுதியை வெளிப்படுத்துமாதலின் நன்கு கருதி வினாவினை எழுப்ப வேண்டுகிறோம்.

—ஆசிரியர் குழு.

வினா விடை

வினா. 1:

சகர முதன்மொழிச் சொற்கள் சங்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. அமணர் என்பது அவற்றுக்குப் பிந்திய சொல்வழக்கு. இங்ஙனமாகவும் சகரம் முதன்மொழி யாகாமையின் அமணர் ஆயிற்றென்றல் எவ்வாறு பொருந்தும். —புலவர் சா. பன்னீர்செல்வம், பட்டுக்கோட்டை.

விடை:–

இவ்வினாவுள் ஒரு பகுதி தன் கோள் கூறலும் அறிவுறுத்தலும் ஒரு பகுதி வினாவுமாக உள. வினா துந்துபி ஆடி இதழில் வந்த ஒரு விடைப்பகுதியைப் பற்றியதாக உளது. அவ் இதழில் எழுப்பப்பெற்ற வினா ''அமணர், உமணர்'' ஆகிய சொற்கள் ஒற்றுமையாக அமையக் காரணம் யாது?'' என்பது. ஆண்டு அமணர் என்ற சொல்லமைப்பைக் குறித்து அச்சொல் சமணர் என்பதன் திரிபாகும் என்றும் அதனை அவ்வாறே வழங்காமல் தொல்காப்பிய நெறியைப் பேணிய சான்றோர் தொல்காப்பிய விதிப்படிச் சகரம் மொழிமுதலாகாமையின் அமணர் என வழங்கினர் என்றும் கூறப்பட்டது.

சமணர் என்பது எக்கால வழக்கு என்பது பற்றியோ சங்க நூல்களில் சகர முதன்மொழி வரவில்லை என்பது பற்றியோ ஆண்டுப் பேசப்படவில்லை. அவைபற்றித் தனியே வினா எழுப்பலாம். அன்றி அவ்விளக்கம் பொருந்தாதெனின் பொருந்து மாறிது என எழுதுங்கள். அஃது அறிஞர்க்கு விருந்தாகும்.

—பேராசிரியர் ச. பாலசுந்தரம்.

வினா. 2:

துணர் ருசு மலர் க-இல் மெய்யென்பது ஒலிப்பின்றி உயிர் மேவுதற்கு அணுக்கமாக நிற்கும் நிலையெனவும் புள்ளி என்பது ஒலிப்பினை உடையது எனவும் விளக்க முற்பட்டு மெய்யென்னும் சொல்லைத் தொல்காப்பியர் ஒலிப்புப்பெறா நிலையைச் சுட்டவே பயன்படுத்துகின்றார் எனக் கூறிச் சில நூற்பாக்களையும் எடுத்துக் காட்டுகின்றீர்கள். மெய்யென்பது செவிப்புலனாய் ஒலிப்புப் பெறாத நிலையாயின்

1. ''மெய்யின் அளவே அரையென மொழிப'' என்னும் நூற்பாவின் பொருள் என்ன?
2. செவிப்புலனாய் ஒலிப்புப் பெறாத நிலைக்கு ஒரு பெயரும் மாத்திரை அளவும் கூறுதல் அறிவுக்கு பொருந்துமாறெங்ஙனம்?

3. ஒலிப்புப் பெறாத மெய் அரைமாத்திரை பெறுமாயின் ஒலிப்புப்பெறும் புள்ளி அதனினும் கூடுதல் மாத்திரை பெற வேண்டுமன்றோ? —புலவர் சா. பன்னீர் செல்வம், பட்டுக்கோட்டை.

விடை:–

வினாவப்பட்ட கட்டுரையின் தலைப்பு–தொல்காப்பியர் கூறும் தமிழ் எழுத்துக்களின் குறியீட்டு விளக்கம் என்பது அதனை ஒட்டி விருப்பு வெறுப்பின்றித் தோய்ந்து எண்ணியிருப்பின் இவ்வையங்கள் தோன்றியிரா. தொல்காப்பிய உரைகளைக் கருத்திற் கொண்டு நோக்கின் இவ்வையங்கள் எழும். நூற்பாக்களைப் பின்னும் முன்னும் பலகால் நோக்கித் தெளிய வேண்டிய சிக்கலான பொருள்கள் இவை. இவ்வினாக்களுக்கு விடையை மீண்டும் அக் கட்டுரையிலேயே காணவேண்டிக் குறிப்பிடுகின்றேன்.

1) அக்கட்டுரை 3. 2. 3-இல் மெய் என்னும் தொகுதிப் பெயருடைய எழுத்துக்களே ஒவ்வொரு நிலையில் வேறுவேறு குறியீடுகளைப் பெறுகின்றன என்று விளக்கப்பட்டுள்ளது. மெய் எழுத்து வேறு புள்ளி எழுத்து வேறு என்று யாண்டும் கூறப்படவில்லை. உருவாகி நிற்கும் மெய் எழுத்து ஒலிக்கும்போது புள்ளி என்னும் குறியீட்டைப்பெறுகின்றது என்றுதான் கூறப் பட்டுள்ளது.

''மெய்யின் அளபே அரையென மொழிப'' என்பதற்கு மெய் யெழுத்தின் மாத்திரை அளவு அரை என்று கூறுவர் புலவர் என் பதுதான் பொருள். அந்த அரை மாத்திரை உயிர்மெய்யாக இசைக்கும்போது நில்லாது உருவாகி நிற்கும்போது புலப்படாது; உயிரைச் சார்ந்து ஒலிக்கும்போதுதான் புலப்படும். அங்ஙனம் ஒலி புலப்பாடாகும் மெய்யைத்தான் புள்ளி என்று குறியீடு செய் கின்றார் ஆசிரியர். எனவே மாத்திரை பெறுவது மெய்யெழுத்து என்பதை கட்டுரை மறுக்கவில்லை. இதனை 5. 0. பகுதியில் காண்க.

2. உயிரெழுத்திற்குக் குறில் நெடில் அளபு குறுக்கம் என அளவைக் கேற்பப் பல குறியீடுகள் செய்தது அறிவுக்குப் பொருந்து மாயின் மெய்யெழுத்திற்கு ஒலிப்பில்லா நிலை ஒலிப்புடைய நிலை, இசைக்கும் நிலை (அலகுபெறும் நிலை) என்னும் நிலைகளுக்கு ஏற்பக் குறியீடுகளைச் செய்வது அறிவுக்கு ஏன் பொருந்தாது? ஒலிப்பில்லா நிலைக்குத்தான் மெய் என்று பெயரே தவிர அது மாத்திரை பெற்று ஒலிக்காது என்று கூறவில்லை. மெய் மாத் திரை பெற்று ஒலிக்கும் நிலையில் புள்ளி என்னும் குறியீட்டால் சுட்டப்படுகின்றது. மாத்திரை பெற்றது புள்ளியன்று மெய் யெழுத்தேதான். ஒரு சாத்தன் ஒவ்வொரு நிலையில் தந்தை—

அண்ணன்—தம்பி— மகன் — மாமன் முதலிய பல்வேறு பெயர்களைப் பெறுகிறான். ஒருத்தியை மணந்தால் கணவன் ஆகிறான். சாத்தன் மணக்காத நிலையில் ஒரு பெயரும் மணந்த நிலையில் ஒரு பெயரும் கொள்ளுதல் அறிவுக்குப் பொருந்தாதா. இவ்வெடுத்துக் காட்டு ஒருபுடை ஒற்றுமை கருதி விளக்கத்திற்காக எழுதப் பட்டது. விபரீதமாகச் சிந்திக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

3. ஒலிப்புப் பெறாத மெய் அரை மாத்திரை பெறும் என்று யாண்டும் கூறவில்லை. மாத்திரை என்பதே ஒலியளவை குறிப்பதாகும். புள்ளி எனத் தனியே ஓர் எழுத்தில்லை மெய் எழுத்திற்குத்தான் ஒரு நிலையில் அந்தப் பெயர் ஆதலின் கூடுதல் மாத்திரை பெறவேண்டுமே என்று கருதுதல் விபரீதமாகும். மீண்டும் அக்கட்டுரையை முழுதும் படித்துப் பார்க்க வேண்டுகிறேன். பின்னும் ஐயமெழின் வினாவுங்கள்.

வினா. 4:

ஒருவன் என்னும் ஆண்பாற் சொல் வழக்கிலிருக்க ஒருவள் என்ற பெண்பாற்சொல் வழக்கில் இல்லையே ஏன்?

—இரா. சேரலாதன், கரந்தை.

விடை :-

ஒருவள் என வழங்குதல் வழுவென ஓர்ந்த சொல்லியல் புணர்ந்த தொல்லியற் சான்றோர் அதனை விலக்கி ஒருத்தி என வழங்கினர். சுட்டுப் பெயர், வினாப் பெயர், வினைப் பெயர்கள் ஒழிந்த ஏனைய பொருள் பற்றி வரும் பெண்பாற் பெயர் இகர விகுதி பெற்றே வரும். பெண்பாற்குரிய பெயரீறு இகரமே என்பதைக் கீழ்வரும் சில சொற்களால் தெரியலாம். ஆயினும் ஆண்டெல்லாம் யாரும் ஐயப்படுதல் இல்லை.

அரசன்—அரசி; தலைவன்—தலைவி; பொன்னன்—பொன்னி; கிழவன்—கிழத்தி; பாணன்—பாடினி; தோழன்—தோழி; தச்சன்—தச்சிச்சி; குமரன்—குமரி; புலையன்—புலைத்தி; பாட்டன்—பாட்டி; திருவாளன்—திருவாட்டி; மாமன்—மாமி; கண்ணாளன்—கண்ணாட்டி; அண்ணன்—அண்ணி; பெருமான்—பெருமாட்டி; குறவன் குறத்தி

மேலும் 'கிரு' என்னும் தொழிற் குறிப்புச் சொல் காரன் என ஆண்பார்க்கும் காரி எனப் பெண்பாற்கும் வழங்குதலை வேலைக்காரன்—வேலைக்காரி; சமையற்காரன்—சமையற்காரி; பணக்காரன்—பணக்காரி முதலிய சொற்களால் அறியலாம்.

எனவே பெண்பாற்குரிய விகுதி இடைச் சொல் இகரம் என்பதும் அஃது ஏற்ற சாரியையை எழுத்துப் பேறாகக் கொண்டுவரும் என்பதும் கண்ட சான்றோர் ஒருவன் — ஒருத்தி என வழங்கினர். இவ் இகரம் தாயி என்பதற்கு மரூஉவாகிய கடைச் சொல் என்பதை என்னுடைய தாய் தந்தை என்னும் ஆய்வுக் கட்டுரையில் காணலாம். —பேராசிரியர் ச. பாலசுந்தரம்.

பதிப்பாசிரியர் குழு:

1. திரு. **எஸ். நடராசன்**, எம். எல். ஏ.,
தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. புலவர் **க. வெள்ளைவாரணனார்,**
பேராசிரியர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

3. திரு. புலவர் பி. **விருத்தாசலம்**, எம். ஏ.
முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

4. திரு. புலவர் **ச. பாலசுந்தரம்,**
367, மேலவீதி,
தஞ்சாவூர்.

5. திரு. புலவர் **சி. கோவிந்தராசன்,**
கரந்தை,
தஞ்சாவூர்.

6. திரு. புலவர் **மீனா. இராமதாசன்**, எம். ஏ.,
முதனிலைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரனார் மேனிலைப் பள்ளி,
கரந்தை, தஞ்சாவூர்.

7. திரு. **அரங்க வே. சுப்பிரமணியன்**, பி. எ.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்;
பொழிற்றொண்டர்.

Regd No. TN/TJ/17.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள் நாடு	வெளிநாடு
1.	ஆண்டு வரி	... 20—00	... 030—00
2.	தனி இதழ்	... 02—00	
3.	ஆயுள் வரி	.. 250—00	... 250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	... 000—25
ஆண்டு வரி	... 003—00
ஆயுள் வரி	... 100—00

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கைக் கோவை	0—12
சித்தரந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
பரத சாத்திரம்	1—50
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0 - 25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம் —(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தொல்—பொதுப்பாயிர உரை	0—12
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல் —சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப் பொழில் (மணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின் — கொழுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர் — ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4 - 00

ஆசிரியரும் வெளியிடுபவரும்: திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ.,
கரந்தைத் தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர்: திருமதி S. நிர்மலா,
அன்னை அச்சகம், 1734, காந்தி சாலை, தஞ்சாவூர்-613 002.